பக்கங்கள்: பத்து

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 7.00

சுடர்:17 வள்ளுவர் ஆண்டு 2033 தை 30 செவ்வாய்க்கிழமை (12-02-2002) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:79

## அமைச்சர் ஜயலத் இன்று வருகிறார்

யாழ்ப்பாணம்,பெப்.12

புனர்வாழ்வு, அகதிகள் மீள்குடிய மர்வு அமைச்சர் ஜயலத் ஜெயவர்த்தன இருநாள் விஜயம் மேற்கொண்டு இன்று யாழ்ப்பாணம் வருகின்றார்.

இன்று காலை பலாலி விமான நிலையத்தை வந்தடையும் அமைச்சர் அங்கிருந்து நேரடியாக காங்கேசன்துறை துறைமுகத்துக்குச் சென்று அங்கு பொருள் இறக்கும் பணிகளைப் பார்வையிடுவார்.

கீரிமலை நகுலேஸ்வரர், மாவிட்டபுரம் கந்தசுவாமி, தெல்லிப்பழை துர்க்கையம்மன் ஆகிய ஆலயங்களுக்குச் செல்லும் அமைச்சர் உடுவில், தெல்லிப்பழை, சங்கானை பிரதேச செயலகப் பிரிவில் உள்ள சில நலன்

(10ஆம் பக்கம் பார்க்க)



பிளாஸ்ரிக் சத்திரசிகிச்சையை மேற்கொள்வதற்காக யாழ். வந்துசேர்ந்த பிரிட்டிஷ் நிபுணர்கள் அடங்கிய மருத்துவக் குழுவினர் நேற்று யாழ்.ஆஸ்பத்திரியில் சிகிச்சைக்குத் தெரிவுசெய்யப்பட்டோரை பரிசோதனை செய்த சமயம் எடுக்கப்பட்ட படங்கள். (படம்: பொ. இராஜேஸ்வரன்)

# திட்டமிட்டபடி வெள்ளியன்று கண்டி வீதி திறக்கப்படுமா?

## களனி ஆற்றில் பஸ் வீழ்ந்ததில் 4பேர் பலி!

கொழும்பு,பெப்.12

எட்டியாந்தோட்டைப் பகுதியில் களனி ஆற்றுக்குள் பஸ் ஒன்று விழுந்ததில் நால்வர் உயிரிழந்தனர்; இந்த விபத்தில் காயமடைந்த 30 பேரில் ஆபத்தான நிலையில் இருந்த இருவர் கொழும்பு மருத்துவமனைக்கு எடுத்துச்செல்லப்பட்டனர்.

நேற்றுமுன்தினம் இடம்பெற்ற இந்த விபத்துக்கு பஸ்ஸில் 'பிரேக்' பிடிக்காததே காரணம் என்று கூறப்படுகிறது. எட்டியாந்தோட்டைப் பொலிஸார் விபத்துத் தொடர்பாக விசாரணை மேற்கொண்டுள்ளனர். (ஒ)

## நடைமுறைச் சிக்கல்களால் தாமதம் என்கிறார் ஜயலத்

கொழும்பு,பெப்ரவரி12

**ஏற்கனவே அறிவிக்கப்பட்டபடி ஏ-9 கண்டி நெடுஞ்சாலையும் மன்னார் - உயிலங்குளம் வீதியும் எதிர்வரும் வெள்ளிக்கிழமை போக்குவரத்துக்குத் திறந்துவிடப்படமாட்டா என தெரியவருகிறது.**

**சில நடைமுறைச் சிக்கல்கள் காரணமாக குறிப்பிட்ட தினத்தில் பாதைகளைத் திறப்பது தாமதமாகலாம் என்று புனர்வாழ்வு, அகதிகள் மீள்குடியமர்வு அமைச்சர் ஜயலத் ஜெயவர்த்தன நேற்றிரவு உதயனுக்குத் தெரிவித்தார்.**

வன்னியில் இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதிக்கும் கட்டுப்பாடற்ற பகுதிக்கும் இடையில் போக்குவரத்தை மேற்கொள்ள வசதியாக கண்டி - யாழ்ப்பாணம் (ஏ-9) நெடுஞ்சாலையையும், மன்னார் - உயிலங்குளம் வீதியையும் திறந்து விடுவதற்கு அரசுத் தரப்பும் விடுதலைப் புலிகளும் ஏற்கனவே இணங்கியிருப்பது தெரிந்ததே.

இந்தப் பாதைகள் எதிர்வரும் 15ஆம் திகதி வெள்ளிக்கிழமை திறந்துவிடப்படும் என்று அரசுத் தரப்பில் ஏற்கனவே அறிவிக்கப்பட்டிருந்தது.

வீதிகளைத் திறந்து போக்குவரத்துச் செய்ய வசதியாக கண்டி வீதியிலும் உயிலங்குளத்திலும் இரு தரப்பினரும் தத்தமது கட்டுப்

(10ஆம் பக்கம் பார்க்க)

## பாதுகாப்பு அனுமதி இன்றியே குடாநாட்டுக்குச் செல்லலாம்

### இதுவரை இருந்த கட்டுப்பாடுகள் நீக்கம்

கொழும்பு,பெப்.12

யாழ்ப்பாணத்துக்கு பயணம் செய்வதற்குப் பாதுகாப்பு அனுமதிபெறும் நடைமுறை உடனடியாக ரத்துச் செய்யப்படுவதாக பாதுகாப்பு அமைச்சு நேற்று அறிவித்துள்ளது.

இலங்கைப் பிரஜைகள் எவரும் பாதுகாப்பு அமைச்சின் அனுமதி பெறாமலேயே விமானம் மூலமோ, கப்பல் மூலமோ யாழ்ப்பாணத்துக்குச் செல்லலாம் என்றும் -

இனிமேல் அவர்கள் விமானம் மற்றும் கப்பல் பயணத்தை மேற்கொள்ளும் இடத்தில் அமைந்துள்ள பாதுகாப்பு மற்றும் பொலீஸ் சாவடிகளில் தமது அடையாளத்தை நிரூபித்தால் மட்டும் போதுமானது என்று பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.

இலங்கையரல்லாதவர்கள் வடக்கே செல்வதாயின் அவர்கள் தமது சொந்த நாட்டில் உள்ள இலங்கைத் தூதரகத்தின் சிபார்சு பெற்றிருந்தால் பாதுகாப்பு அமைச்சின் அனுமதி தேவையில்லை என்றும் -

இலங்கையில் உள்ள வெளிநாட்டு ராஜதந்திரிகள் வடக்கே விடுவிக்கப்பட்ட அல்லது விடுவிக்கப்படாத பகுதிகளுக்குச் செல்லப் பாதுகாப்பு அனுமதி பெறத்தேவையில்லை -

என்றும் - அறிவிக்கப்பட்டுள்ளது. இலங்கையரோ அல்லது இலங்

(10ஆம் பக்கம் பார்க்க)

## புரிந்துணர்வு உடன்படிக்கை இன்னும் தயாராகவில்லை

### நோர்வேத் தூதரகம் தெரிவிப்பு

கொழும்பு,பெப்.12

யுத்தநிறுத்தத்தை உள்ளடக்கிய புரிந்துணர்வு உடன்படிக்கையின் நகல் எதுவும் இதுவரை இலங்கை அரசிடமோ, விடுதலைப் புலிகளிடமோ வழங்கப்படவில்லை என்று இலங்கைக்கான நோர்வே தூதரகம் தெரிவித்துள்ளது.

புரிந்துணர்வு உடன்படிக்கை தொடர்பாக அரசும், விடுதலைப் புலிகளும் பெரும்பாலும் இணக்கப்பாடு ஒன்றை எட்டிவிட்டதாக ஊடகங்கள் சில வெளியிட்ட செய்திகள் குறித்தே நோர்வேத் தூதரகம் இவ்வாறு தெரிவித்தது.

இருதரப்பும் உடன்படிக்கையில் இடம் பெறக்கூடிய விடயங்கள் குறித்து ஆராய்ந்துவருவதாகவும் - இறுதி உடன்படிக்கை இன்னமும் தயார் செய்யப்படவில்லை என்றும் - தூதரகம் மேலும் தெரிவித்தது. (ஒ)

### உயர் நீதிமன்றம் நேற்றுத் தீர்ப்பு

## 32 பொலீஸ் அத்தியட்சகர்களின் பதவி உயர்வுகள் உடனடியாக ரத்து!

### பாதிக்கப்பட்டோருக்கு நஷ்டஈடு வழங்கப் பணிப்பு

கொழும்பு,பெப்.12

32 பொலீஸ் அத்தியட்சகர்களின் பதவி உயர்வுகள் அநீதியானவை என்று உயர் நீதிமன்றம் நேற்று அவற்றை ரத்துச் செய்தது. இந்த அநீதியான "பதவி உயர்வுகள் காரணமாகப் பாதிக்கப்பட்டவர்களுக்கு 4லட்சத்து 60 ஆயிரம் ரூபா நஷ்டஈடு வழங்கவேண்டும் என்றும் உயர் நீதிமன்றம் தீர்ப்பு வழங்கியது.

பதவி உயர்வுகளை ரத்துச் செய்யும்படி உத்தரவிட்டுள்ள உயர் நீதிமன்றம் இந்த விவகாரத்தில் முன்னாள் பாதுகாப்பு அமைச்சுச் செயலாளர் சந்திரானந்த டி சில்வா, பொலீஸ் மா அதிபர் லக்கி கொடித்துவக்கு ஆகியோர் அடிப்படை மனித உரிமைகளை மீறியுள்ளனர் என்றும்-

லஞ்ச ஒழிப்புச் சட்டத்தின் கீழ் அவர்கள் மீது வழக்குத் தாக்கல் செய்வது குறித்து ஆராயும்படியும்-

ஆலோசனை தெரிவித்துள்ளது.

முந்திய பொ.ஐ.மு. அரசாங்கத்தின் காலத்திலேயே 2000ஆம் ஆண்டு மார்ச், மே மாதங்களில் பொலீஸ் சேவை ஆணைக்குழு பதவி உயர்வுகளை வழங்கியது.

பதவி உயர்வுகள் வழங்கப்பட்டதை எதிர்த்து அவிசாவளை பொலீஸ் நிலையத்தைச் சேர்ந்த உதவிப் பொலீஸ் அத்தியட்சகர் என்.டி.ஜெ. நாரங்கொட உட்பட 17பேர் உயர் நீதிமன்றத்தில் மனுத் தாக்கல் செய்திருந்தனர்.

மனுமீதான விசாரணை நேற்று உயர் நீதிமன்ற நீதியரசர்கள் மார்க் பெர்னாண்டோ டி.பி.எஸ்.குணசேகர, எஸ்.எச்.யாப்பா ஆகியோர் முன்னிலையில் எடுத்துக்கொள்ளப்பட்டது.

(10ஆம் பக்கம் பார்க்க)

### பிரதமர் ரணில் சிங்கப்பூர் செல்கிறார்

கொழும்பு,பெப்.12

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க நாளை சிங்கப்பூருக்குப் பயணமாகின்றார். வர்த்தக முதலீடுகள் தொடர்பாக சிங்கப்பூர் பிரதமருடன் அவர் கலந்துரையாடுவார். அதன் பின்னர் அவர் அமெரிக்காவுக்குச் செல்லவுள்ளார். (ஒ-3)

### பிளாஸ்ரிக் சத்திரசிகிச்சைக்காக

## பிரிட்டிஷ் நிபுணர் குழு நேற்று யாழ். வருகை

யாழ்ப்பாணம்,பெப்.12

யாழ்.போதனா வைத்தியசாலையில் பிளாஸ்ரிக் சத்திரசிகிச்சையை மேற்கொள்வதற்காக ஏழு வைத்திய நிபுணர்கள் உட்பட 11பேர் கொண்ட பிரிட்டிஷ் மருத்துவர் குழு நேற்று மாலை யாழ்ப்பாணம் வந்து சேர்ந்தது.

பிளாஸ்ரிக் சத்திர சிகிச்சை மேற்கொள்வதற்காக யாழ். ஆஸ்பத்திரியில் பெயர்களைப் பதிவு செய்த 300 பேரில் ஒரு தொகுதியினரை மருத்துவக் குழுவினர் நேற்றே பரிசோதனை செய்தனர்.

இன்று மேலும் ஒரு தொகுதியினருக்குப் பரிசோதனை நடத்தப்படவிருக்கின்றது.

பரிசோதனைகளுக்குத் தெரிவு செய்யப்பட்டுள்ளவர்களுக்கான சத்திரசிகிச்சை நாளை ஆரம்பமாகும். எதிர்வரும் 25ஆம் திகதி வரை சத்திர சிகிச்சை இடம்பெறும்.

பிரிட்டிஷ் குழுவில் இடம்பெற்றுள்

(10ஆம் பக்கம் பார்க்க)

## நாரந்தனைத் தாக்குதல் வழக்கு

# 'ஹண்டர்' வாகனம் வழிமறித்தது; நெப்போலியனை அதில் கண்டேன்!

## பிரதேச சபை உறுப்பினர் சாட்சியம்

யாழ்ப்பாணம்,பெப்.12

நாரந்தனையில் தமிழர் கூட்டமைப்பினர் மீது நடத்தப்பட்ட தாக்குதல் சம்பவத்தின்போது சம்பவ இடத்தில் முதலாம் எதிரியான நெப்போலியன் நின்றதைத் தான் கண்டதாக சாட்சியொருவர் நீதிமன்றத்தில் தெரிவித்தார்.

நாரந்தனைத் தாக்குதல் சம்பவம் தொடர்பான வழக்கு விசாரணை நேற்று யாழ்.நீதிமன்றத்தில் நடந்தபோது சாட்சியமளித்த 13ஆவது சாட்சியான மானிப்பாய் பிரேதேச சபை உறுப்பினர் அன்ரன் யோகராசா அருளானந்தன்(வயது 39) இவ்வாறு சாட்சியமளித்தார்.

இவரது சாட்சியம் கடந்த வெள்ளிக்கிழமையும் பதிவு செய்யப்பட்டது. நேற்று தொடர்ந்து சாட்சியமளித்த போது அவர் கூறியதாவது:-

நாங்கள் சம்பவ இடத்தை நோக்கிச் சென்றுகொண்டிருந்த வேளையில் எம்மை நோக்கிவந்த வெள்ளை நிறமுடைய 'ஹன்டர்' வாகனம் ஒன்று குறுக்கே திரும்பி வழிமறித்தது. அதில் 50இற்கும் மேற்பட்டவர்கள் ஆயுதங்கள், பொல்லுகள் மற்றும் பெரிய தடிகளுடன் இருந்தனர். அவர்களில் நெப்போலியனும் இருந்தார். அவரை ஏற்கனவே எனக்குத் தெரியும். அவர் அந்த வாகனத்தின் முன் இருக்கையில் இருந்தார். அதனால் தான் அவர்கள் ஈ.பி.டி.பியினர் என்று அறிந்துகொண்டேன். அந்த வாகனம் தான் எம்மை வழிமறித்தது.

'ஹன்டர்' வாகனத்திலிருந்த அனைவரும் குதித்து எமது வாகனத்தின் கண்ணாடிகளை அடித்து நொறுக்கினர். நெப்போலியனின் கையில் ஏ.கே.47 ரகத் துப்பாக்கி ஒன்று இருந்தது. அவர் எமது வாகனத்தின் முன்புறமாகச் சுட்டார். எம்மை நோக்கிச் சுட்டார். இதனால் எனக்குக் காலில் காயம் ஏற்பட்டது. சாரதியின் பின்புற இருக்கையில் இருந்த எம்.கே.சிவாஜிலிங்கத்துக்கும் காயம் ஏற்பட்டது.

சம்பவத்தில் கொல்லப்பட்ட பேரம்பலம் மற்றும் கமல்ஸ்ரோன் ஆகியோரும் எமது வாகனத்திலேயே இருந்தனர்.

- இவ்வாறு சாட்சி தெரிவித்தார்.

இதனைத் தொடர்ந்து சாட்சியமளித்த 15ஆவது சாட்சியான இளைப்பாறிய கிராம அலுவலர் கனகசபை சிவராஜா(வயது 59) கூறியதாவது:-

எம்மைத் தாக்கிய கும்பலில் நெப்போலியனும் இருந்தார். திருநெல்வேலியிலுள்ள ஈ.பி.டி.பி. அலுவலகத்தில் நெப்போலியனை ஏற்கனவே நான் கண்டிருக்கிறேன். எம்மைத் தாக்கிய கும்பலில் இருந்தவர்கள் எங்களை நிர்வாணமாக நிற்கும்படி கூச்சலிட்டு மிரட்டினர். - இவ்வாறு க.சிவராஜா தெரிவித்தார்.

அடுத்து 20ஆவது சாட்சியான இளைப்பாறிய உத்தியோகத்தர் தம்பி முத்து துரைமணி(வயது 60) சாட்சியமளித்தார்.

வழக்கு விசாரணை இன்று செவ்வாய்க்கிழமையும் தொடர்ந்து நடைபெறவுள்ளது. (ஓ-10)

## தென்மராட்சி ஆசிரியர்களுக்கு!

தென்மராட்சி,பெப்.12

தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைகளில் வெற்றிடமாக உள்ள ஆசிரிய நூலகர் பதவிகளில் இணைந்துகொள்ள விரும்பும் ஆசிரியர்கள் எதிர்வரும் 15ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 10மணிக்கு பின்வரும் ஆவணங்களுடன் வலயக் கல்வி அலுவலகத்திற்கு வருகைதருமாறு வலயக் கல்விப் பணிப்பாளர் வ.செல்வராசா கேட்டுள்ளார்.

பிறப்புச் சான்றிதழ், முதல் நியமனக் கடிதம், அடையாள அட்டை, கல்வித் தகைமைச் சான்றிதழ்கள், ஆங்கிலபா. பெறுபேற்றுச் சான்றிதழ, சேவைக் காலத்தை உறுதிப்படுத்தும் அதிபரின் கடிதம் ஆகியவற்றின் தலா இரு நிழற்படப் பிரதிகளுடன் சமுகமளிக்குமாறும் -

45 வயதுக்கு உட்பட்ட ஐந்து வருட சேவையுடைய பட்டதாரி ஆசிரியர்களும், எட்டு வருட சேவையுடைய பயிற்றப்பட்ட ஆசிரியர்களும் இத்தெரிவில் பங்குபற்ற முடியுமெனவும் -

தெரிவிக்கப்பட்டது. (ஓ-117)

### சுகாதார தொண்டர் சங்க கலந்துரையாடல்

யாழ்மாவட்ட சுகாதாரத் தொண்டர் சங்க நிர்வாகிகளுக்கான கலந்துரையாடல் ஒன்று நாளை புதன்கிழமை பிற்பகல் 2.30 மணியளவில் யாழ். இந்து ஆரம்பப் பாடசாலையில் நடைபெறவுள்ளது.

மேற்படி சங்கத்தின் அனைத்து நிர்வாக உறுப்பினர்களும் இந்தக் கலந்துரையாடலில் பங்கேற்குமாறு கோரப்பட்டுள்ளனர். (ஓ)

# தமிழகத்தில் தடுத்து வைக்கப்பட்டுள்ள ஈழத்தமிழர்களை விடுவிக்க வேண்டும்

## தமிழர் தேசிய இயக்கம் தீர்மானம்

திருச்சி,பெப்.12

இலங்கையில் அமைதி நிலவும் இந்தச் சமயத்தில் தமிழ்நாட்டின் சிறப்பு முகாம்களில் தடுத்து வைக்கப்பட்டுள்ள ஈழத்தமிழர்களை விடுவித்து, பாதுகாப்பாக இலங்கைக்கு அனுப்பி வைக்கவேண்டுமென்று திருச்சியில் நடைபெற்ற தமிழர் தேசிய இயக்க மாநாட்டில் தர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

'விஸா' இன்றி தங்கியிருந்தோர், போராளிக் குழுக்களுடன் தொடர்புடையோர் தகுந்த ஆவணங்கள் இன்றி வெளிநாடுகளுக்குச் செல்ல முயன்றபோது இந்திய விமான நிலையங்களில் பிடிபட்டோர் ஆகியோர் உட்பட ஏராளமான ஈழத் தமிழர்கள் தமிழ்நாட்டில் அமைக்கப்பட்டுள்ள சிறப்பு முகாம்களில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

இவர்களை விடுவிக்குமாறே மாநாட்டில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களில் ஒன்று வலியுறுத்துகிறது.

அந்தத் தீர்மானத்தில் கூறப்பட்டிருப்பதாவது:-

இலங்கைத் தமிழர் பிரச்சினையில் திருப்பம் ஏற்பட்டுள்ளது. சமாதானத்திற்கான பேச்சுக்கள் தொடக்கப்படவுள்ளன. நோர்வே நாடு சமாதானத்திறகாக முன் முயற்சிகளை எடுத்து வருகின்றது. அந்த முயற்சிக்கு இந்தியாவும் ஆதரவாளித்துள்ளது. பல ஆண்டுகளுக்கு மேலாகயும் எவ்வித விசாரணைகளும் இல்லாமல் தமிழகத்தில் சிறப்பு முகாம்கள் என்ற பெயரில் உள்ள சிறைகளில் ஈழத்தமிழர்கள் பலர் அடைக்கப்பட்டுள்ளனர். இவர்களை விடுவிக்குமாறு ஏற்கானவே தேசிய மனித உரிமை ஆணையம் கூறிவிட்டது.

ஆனால் இலங்கையில் போர்ச் சூழ்நிலை நிலவுவதாகக்கூறி அவர்கள் விடுவிக்கப்படாதுள்ளனர்.

அமைதி நிலவும் இந்தச் சூழ்நிலையில் சிறப்பு முகாம்களில் தடுத்து வைக்கப்பட்டுள்ள ஈழத்தமிழர்கள் அனைவரையும் விடுதலை செய்து அவர்களை ஈழத்திற்கு பாதுகாப்பாக அனுப்பி வைக்கவேண்டும்.

இவ்வாறு அந்தத் தீர்மானத்தில் வலியுறுத்தப்பட்டுள்ளது. (ஓ)

### போக்குவரத்துப் பயிற்சி வகுப்பு

வலி.வடக்கு,பெப்.12

சுன்னாகம் பொலீஸ் நிலையத்துக்குட்பட்ட பகுதிகளில் போக்குவரத்து சம்பந்தமான பயிற்சி வகுப்புகள் பாடசாலைகள் மற்றும் பொது நிறுவனங்களில் நடத்தப்பட்டு வருகின்றன.

சுன்னாகம் பொலீஸ் நிலையப் பொறுப்பதிகாரி பாலித்த பெர்னாண்டோ தலைமையில் அரசின் நூறு நாள் அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் இந்தப் பயிற்சி வகுப்புகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. (ஓ-86)

### பெறுமதி வாய்ந்த முத்திரைகள் வந்தன

யாழ்ப்பாணம்,பெப்.12

யாழ்.பிரதம தபாலகத்துக்கு எடுத்துவரப்பட்டுள்ள 500ரூபா, ஆயிரம் ரூபா பெறுமதியான முத்திரைகள் இன்று முதல் விற்பனை செய்யப்படும் என்று யாழ்.தபாலக அதிபர் சி.மார்க்கண்டன் தெரிவித்தார். (ஐ-3)

### தென்மராட்சி வலய சங்கீத ஆசிரியர்களுக்கு செயலமர்வு

தென்மராட்சி,பெப்.12

தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைகளில் சங்கீத பாடம் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான செயலமர்வுகள் எதிர்வரும் 16 ஆம், 17 ஆம் திகதிகளில் நெல்லியடி மத்திய மகாவித்தியாலயத்தில் நடைபெறவுள்ளன.

தரம் 6,7 வகுப்புகளின் ஆசிரியர்களுக்கு 16 ஆம் திகதியும், தரம் 8,9 வகுப்பு ஆசிரியர்களுக்கு 17 ஆம் திகதியும் காலை 8.30 மணிக்கு நடைபெறுமென வலயக் கல்விப் பணிப்பாளர் வ.செல்வராசா அறிவித்துள்ளார். (ஓ-117)

### தென்மராட்சிக்கு புதிய பஸ்சேவை

தென்மராட்சி,பெப்.12

வடமராட்சிப் பகுதியில் இருந்து தென்மராட்சிக்கு செல்பவர்களின் நலன்கருதி பருத்தித்துறையில் இருந்து நெல்லியடி - கொடிகாமம் ஊடாக யாழ்ப்பாணத்திற்கான பஸ் சேவை நேற்றுமுன்தினம் தொடக்கம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

காலை 7.00 மணிக்கு பருத்தித்துறையிலிருந்து புறப்படும் பஸ் நெல்லியடி - கொடிகாமம் ஊடாக யாழ்ப்பாணம் சென்று பின்னர் பி.ப. 3.30 மணிக்கு யாழ்ப்பாணத்திலிருந்து புறப்பட்டு இதே மார்க்கமாக பருத்தித்துறைக்கு பி.ப 6.30 மணிக்கு வந்து சேருமென அறிவிக்கப்பட்டுள்ளது. (ஓ-117)

# குடாநாட்டின் அபிவிருத்தி: சில ஆலோசனைகள்

**போரினால் அழிவுண்டுள்ள யாழ்ப்பாணத்தை அபிவிருத்தி செய்வதற்கான திட்ட முன்மொழிவுகளை யாழ்.மாவட்ட அரச செயலகம் சேகரித்து வருவதாக வெளியான தகவலை அடுத்து குடாநாட்டை அபிவிருத்தி செய்யும்போது கவனத்தில் கொள்ளவேண்டிய சில விடயங்களை வாசகர் ஒருவர் அனுப்பி வைத்திருக்கிறார். அதனை இங்கு பிரசுரம் செய்கிறோம்.**

**மு.கனகசபை**
*கொழும்புத்துறை*

யாழ்ப்பாணம் அபிவிருத்தி பற்றி சிந்திக்கின்ற இவ்வேளையில் சில கருத்துக்களை முன்வைக்கலாமென விரும்புகிறேன்.

யாழ்ப்பாணம், பரப்பளவில் ஏறக்குறைய சிங்கப்பூரை ஒத்திருக்கிறது. அந்நாடு மிகவேகமாக வளர்ந்திருக்கிறது. ஆனால் இறந்தோரை அடக்கஞ்செய்ய இடமில்லாதிருக்கிறதென பத்திரிகையொன்றில் ஒரு செய்தி வந்தது.

இங்கு விவசாய நிலமிருக்கிறது. தோட்டச் செய்கைக்குகந்த செம்மண் பரப்பிருக்கிறது. தென்மராட்சியில் பழமரங்களுக்கேற்ற இருவாட்டி கலந்த மணற்றரையிருக்கிறது. மாரி மழையும் கோடை வரட்சியுமான மத்தியதரைக் கடற்காலநிலையைக் கொண்ட தென்பது ஒரு தனிச்சிறப்பு. கிடைக்கின்ற எல்லா உணவுப் பண்டங்களும் சுவைமிக்கவை. இந்த பயன்தரு நிலங்களைப் பேணவேண்டும்.

திட்டமிடுங்கால் ஒரு நூறுவருட வளர்ச்சியை மனதில் எடுக்கலாம். இன்றைய சனத்தொகை, வெளியேறியோரையுஞ் சேர்த்து சுமார் பத்து லட்சம். இது ஐம்பது ஆண்டுகளின் பின்னர் சுமார் முப்பது லட்சமாக உயர வாய்ப்பிருக்கிறது. யாழ்.குடாநாடு சனநெருக்கமுள்ள இடமாகிவிடலாம்.

1 குடியிருப்பு நிலங்களைத் தொடர் மாடிகளிலும் அரச கட்டங்களை பலமாடிகள் கொண்ட உயர்ந்த கட்டடங்களிலும் அடக்கினால் நிலம் பேணப்படும்.

2. யாழ். வீதிகள் பல, வண்டிற்பாதைகளை அபிவிருத்தி செய்ததால் ஏற்பட்டவை. அதனால் வளைந்து வளைந்து செல்லுகின்றன. உ+ம் பருத்தித்துறை வீதி. வீதிகளை அகலப்படுத்துவதாலும் குருட்டு வளைவுகளை நேராக்குவதாலும் பாதுகாப்பான விரைந்த போக்குவரத்துக்கு வழி செய்யலாம்.

3. குடிசன நெருக்கடி இல்லாத நெடுஞ்சாலைகளின் இரு மருங்கும் பயன்தரும் வேம்பு, புளி, நெல்லி, இலுப்பை, கடுக்காய், மலைவேம்பு போன்ற விருட்சங்களை நிழல்தரு மரங்களாக நடுவதால் நிழலோடு, அழகோடு, வருமானமும் கிடைக்கும்.

4. மண்வளம் குறைந்த கரையோரங்களில் மரமுந்திரிகை, சவுக்கு, பனை போன்ற மரங்களை நடலாம்.

5. ஏரிக்கடலை ஆழமாக்கி, குருநகரில் இருந்து கொழும்புத்துறை வரையுள்ள தெற்குப் புறத்தை 'றெக்கிளமேசன்' போல மேடாக்களாம். அதேவேளை நகருக்கு அண்மையில் சிறிய துறைமுகத்தையும் அமைக்கலாம்.

6. கரையோரத்திலுள்ள மீன்பிடித்துறைகளை அபிவிருத்தி செய்யலாம்.


7. கேரதீவு, சங்குப்பிட்டி இடையேயுள்ள சிறிய கடற்பகுதிக்கு பாலம் அமைப்பதால், குடாநாட்டுக்கும் தெற்கேயுள்ள பூநகரி, மன்னார் போன்ற இடங்களின் பிரயாணத்தை இலகுவாக்கலாம்.

8. முன்பிருந்தது போல மண்டைதீவில் ஒலி, ஒளிபரப்பு நிலையங்களை மீண்டும் கட்டவேண்டும்.

9. யுத்த அனர்த்தத்தால் ஏற்பட்ட இழப்புகளுக்கு முன்னுரிமை கொடுத்து சேதமடைந்த பகுதிகளை அபிவிருத்தி செய்து மீண்டும் மக்களைக் குடியேற்றவேண்டும்.

### யாழ்.நகர அபிவிருத்தி

1. பழைய இடத்திலே அழகான மாநகர மண்டபத்தைக் கட்டவேண்டும். அதன் அமைப்பு, நூல்நிலையக் கட்டடத்தோடு இணைந்து செல்லக்கூடியதாக இருக்கவேண்டும். பெங்களூர், மைசூர் போன்ற இடங்களில் உள்ளவை போன்றதும், முன்பு இங்கிருந்ததுபோன்றதுமான திராவிடக் கலைமிக்க கம்பீரமான கட்டடம் வேண்டும்.




2. நீதிமன்றப் பழைய கட்டடங்கள் அழிந்துவிட்டன. அந்தச் சிறிய இடத்தில் பல மாடிகளைக் கொண்ட நீதிமன்ற வளாகம் அமையவேண்டும்.

3. பல அரச திணைக்களங்களையும் அடக்கியதான நிர்வாக வளாகத்தை பொருத்தமான இடத்தில் அமைப்பதால், ஆகாங்கு சிதறிக்கிடக்கும் அரச பணிமனைகளை ஓரிடத்தில் நிறுவிவிடலாம், இது மக்களுக்கு மிக வசதியாகவிருக்கும்.

4. நகரில் நெருக்கடி மிக்க இடங்களிலுள்ள சிறு தொழிற்சாலைகளை - நாவற்குழி போன்ற புறநகர்ப் பகுதிக்கு நகர்த்தலாம்.

5. நகர மத்தியில் இருக்கின்ற பொது வைத்தியசாலையில் ஏற்கனவே இடநெருக்கடி இருக்கிறது. நீண்ட நாள் நோயாளிகளின் சிகிச்சைக்காக அல்லைப்பிட்டி, மண்கும்பான் பகுதியில் வைத்தியசாலைகளை நிறுவலாம்.

6. நகர் நீர் விநியோகத்துக்கு கோண்டாவிலை மட்டும் நம்பியிராமல், மண்கும்பான் போன்ற பகுதிகளில் நன்னீர் வளங்கள் கிடைக்குமா என ஆய்வு செய்யவேண்டும்.

7. யாழ்.நகர வடிகாலமைப்பை நவீனப்படுத்தவேண்டும்.

8. மணிக்கூட்டுக் கோபுரத்துக்கு அண்மையில் உள்ள புல்லுக்குளத்தையும், ஆங்காங்கு காணப்படும் சிறு குளங்களையும் தெப்பக் குளங்கள் போன்று அழகுபடுத்தவேண்டும்.

9.சுப்பிரமணியம் பூங்கா போன்று பல் சிறிய சிறுவர் பூங்காங்களை அமைக்கவேண்டும்.

10. சிறுத்தீவு போன்று அமைதியான இடத்தில் வாடி வீடு கட்டலாம்.

11. பெரிதான விளையாட்டுத் திடல் ஒன்றை(ஸ்ரேடியம்) காக்கை தீவுப் பகுதியில் அமைக்கலாம்.

12. எங்கள் கலை, கலாசாரத்தைப் பேணும் வகையில் பிறர் அறியும் வகையிலும் ஓர் அரும்பொருள் காட்சியகமும் (மியூசியம்) ஓவியக் காட்சி அகமும் (ஆட் கலரி) நல்ல இடத்தில் பெரிதாகக் கட்டவேண்டும். இப்போ சில சிறந்த ஓவியர்கள் பல கஷ்டங்களின் மத்தியிலும் தமது பங்களிப்பைச் செய்கிறார்கள். அவைகளைப் பேணவேண்டும்.

13. துண்டி, வில்லூன்றி, கோம்பையன் சுடலைகளை நவீனமயமாக்கவேண்டும்.

14. கோட்டையைச் சூழவுள்ள மைதான வெளிகளில் கட்டடங்கள் கட்டாமல் பேணவேண்டும்.

15. நகரிலுள்ள குச்சொழுங்கைகளை அகலமாக்கவேண்டும்.

16. கச்சேரி வளவிலுள்ள இடிந்துபோன பழைய கட்டடங்களை அகற்றி பழைய பூங்காவை விஸ்தரிக்க வேண்டும். *

### விஞ்ஞான வினா-விடை போட்டி

கோப்பாய்,பெப்.12

யாழ்ப்பாண விஞ்ஞான சங்கம் யாழ். மாவட்ட பாடசாலைகளுக்கிடையே நடத்தும் வருடாந்த விஞ்ஞான வினா - விடைப் போட்டியின் அரை இறுதிப் போட்டி நாளை புதன்கிழமை காலை 9மணிக்கு யாழ்.இந்துக் கல்லூரியில் இடம்பெறவுள்ளது.

மேற்படி போட்டியில் இடம்பெறும் வினா - விடைகள் ஜி.சீ.ஈ.உயர்தரப் பரீட்சையில் தோற்றவுள்ள மாணவர்களுக்கு அதிகம் உபயோகமாக இருக்கும் என்று தெரிவிக்கப்பட்டது. (ஓ)

### தொழில்நுட்ப நிறுவன பரீட்சை

யாழ்ப்பாணம்,பெப்.12

யாழ். உயர்தொழில்நுட்ப நிறுவன உயர் தொழில் முகாமைத்துவ டிப்ளோமா 2ஆம் வருடப் பரீட்சை எதிர்வரும் 16ஆம் திகதி நடைபெறும்.

அத்துடன் யாழ். தொழில்நுட்ப நிறுவன உயர் தேசிய கணக்கியல் டிப்ளோமா 4 ஆம் வருடம், தேசிய ஆங்கில டிப்ளோமா 2 ஆம் வருடம் ஆகிய பரீட்சைகள் எதிர்வரும் 18 ஆம், 19ஆம் 20ஆம் திகதிகளில் நடைபெறவிருக்கின்றன.

(ஐ-3)

### ஆங்கில டிப்ளோமா பரீட்சை முடிவு

யாழ்ப்பாணம்,பெப்.12

யாழ்ப்பாணம் உயர்தர தொழில்நுட்ப நிறுவனத்தால் நடத்தப்பட்ட ஆங்கில தேசிய டிப்ளோமா இறுதியாண்டுப்பரீட்சைப் பெறுபேறுகள் பரீட்சை ஆணையாளரினால் வெளியிடப்பட்டுள்ளன.

சித்தியடைந்தவர்களின் விவரம் வருமாறு:

ரி.யசோதா, எஸ்.குமணன், பி.நர்மதா; ஏ.பகீரதன், ரி.ரதிவதனி, கே.சிறீ கருணாகரன், ஆர்.சர்மினி, பி.சுபாசினி, பி.டபிள்யூ.நவராஜா. (ஐ-3)

# ஆப்கான் தேசிய இராணுவத்துக்கு ரஷ்யாவிடமிருந்து ஆயுதங்கள்

மொஸ்கோ,பெப்.12


ஜெனரல் பாஹிம்.

ஆப்கானிஸ்தானின் தேசிய இராணுவத்துக்கு ஆயுத தளபாடங்களை வழங்குவது தொடர்பாக அந்த நாட்டு பாதுகாப்பு அமைச்சர் ஜெனரல் மொஹமட் பாஹிம் மொஸ்கோவில் ரஷ்யத் தலைவர்களுடன் பேச்சு நடத்தியுள்ளார்.

"இராணுவ ஆயுதங்களையும் உபகரணங்களையும் ரஷ்யாவிடம் இருந்து கொள்வனவு செய்வதற்கு நாம் எண்ணியுள்ளோம். அது தொடர்பான விரிவான ஒப்பந்தம் ஒன்றையும் நாம் ரஷ்ய அரசுடன் செய்துகொள்ள உள்ளோம்" - என்றார் ஜெனரல் பாஹிம்.

ஆப்கானிஸ்தான் தொடர்பான ஆழ்ந்த அனுபவம் கொண்ட ஒரு நாடு ரஷ்யா என்பதால், ஆப்கான் இராணுவத்தை உருவாக்குவதில் அது பெரும்பங்காற்றமுடியும் என்று ஆப்கான் நம்புகின்றது.

ஆப்கான் இராணுவத்தை அமைப்பதற்கான இராணுவ ஆலோசகர்களை ரஷ்யா வழங்கி உதவவுள்ளது.

இந்த விவகாரம் தொடர்பாக பாஹிம் இன்று ரஷ்ய இராணுவத்தின் பிரத்ம அதிகாரியான ஜெனரல் அன டோனி கவாஸ்கின்னச் சந்தித்துப் பேச உள்ளார்.


ஆப்கான் இராணுவத்தின் டாங்கிப் பிரிவு

ஆப்கானில் உள்ள ஆயுதப் படைகள் அனைத்துக்கும் ரஷ்ய துப்பாக்கிகளும், டாங்கிகளும், கவசவாகனங்களும் ஏற்கனவே பரிச்சயமானவை. எனவேதான் தனது இராணுவத்துக்கு வேண்டிய ஆயுத தளபாடங்களை ரஷ்யாவிடம் இருந்து வாங்க ஆப்கான் ஆர்வம் காட்டுகின்றது என்று பி.பி.ஸி.தெரிவித்துள்ளது.

1970களில் அப்போதைய சோவியத் யூனியன் அரசு ஆப்கானிஸ்தான் இராணுவத்துக்கு இராணுவப் பயிற்சிகளையும் ஆயுதங்களையும் வழங்கி இருந்தது. தற்போது ஆப்கானிஸ்தானில் உள்ள படைத் தளபதிகள் பலருக்கும் ரஷ்ய மொழியில் பேசத்தெரியும் என்றும் அது குறிப்பிட்டது.

# கொல்கத்தா தாக்குதல் சம்பவம்: மேலும் 3 பாகிஸ்தானியர் கைது !

கொல்கத்தாவில் உள்ள அமெரிக்க மையம் தாக்கப்பட்டது தொடர்பாக 3 பாகிஸ்தானியர்களை டில்லிப் பொலீஸார் நேற்றுமுன்தினம் கைது செய்துள்ளனர். இதே வழக்கில் தொடர்புடைய முக்கிய குற்றவாளி எனக் கூறப்படும் அப்தாப் அன்சாரி கைது செய்யப்பட்ட பின்னர் இவர்கள் மூவரும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

ஏற்கனவே இந்த வழக்குத் தொடர்பாக 2 பாகிஸ்தானியர்களும் ஒரு பங்களாதேஷ் நாட்டவரும் கைது செய்யப்பட்டுள்ளனர். இவர்கள் கொடுத்த தகவலில் பேரிலேயே தற்போதைய மூவரும் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகின்றது. இதேவேளை -

கொல்கத்தா, அமெரிக்க மையத்தில் இடம்பெற்ற தாக்குதலை நடத்த உத்தரவிட்டது தானே என்று அன்சாரி ஒப்புதல் வாக்குமூலம் அளித்துள்ளதாக இணையத்தளம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

இந்தியா முழுவதும் உள்ள முக்கிய கடத்தல்காரர்களுடன் தனக்கு தொடர்புகள் இருப்பதாகவும் - ஆள்கடத்தல், ஆயுதக்கடத்தல் ஆகியவற்றின் மூலம் இதுவரை தான் 105 கோடிரூபா வரை சொத்துச் சேர்த்துள்ளதாகவும் - அன்சாரி தனது வாக்குமூலத்தில் கூறியுள்ளார் என்று அந்த இணையத்தளம் மேலும் தெரிவித்தது. செப்ரெம்பர் 11 இல் அமெரிக்காவில் இடம்பெற்ற தாக்குதலிலும் அன்சாரிக்கும் தொடர்பிருந்ததாக இந்திய மத்திய புலனாய்வு அமைப்பான சீ.பி.ஐ. கூறுகின்றது. (ம)

# ஈராக்கிய குர்டிஷ் பகுதியில் மனிதப் புதைகுழி கண்டுபிடிப்பு

ஈராக்கிய குர்டிஷ் பகுதி நகரான சுலைமானியாவுக்கு வெளியே மனிதப் புதைகுழி ஒன்றை அதிகாரிகள் கண்டுபிடித்துள்ளனர். அதிலிருந்து 6 சடலங்களின் எச்சங்களும் மீட்கப்பட்டுள்ளன.

மீட்கப்பட்ட எச்சங்கள் அனைத்தும் இளைஞர்களுடையவை என்று தெரிவிக்கப்படுகின்றது. குர்டிஷ் இனத்தவர்களின் பாரம்பரிய உடைகளும் இந்த எச்சங்களில் இருந்து மீட்கப்பட்டுள்ளன.

சடலங்களின் எச்சங்களை அடையாளம் காணும் பணியில் அதிகாரிகள் ஈடுபட்டுள்ளனர். 1982ஆம் ஆண்டு ஈராக்கிய இராணுவம் இந்தப் பகுதியில் முகாமிட்டிருந்தது. அதன் பின்னர் இங்கு கண்டுபிடிக்கப்படும் நான்காவது மனிதப் புதைகுழி இது என்கின்றன குர்டிஷ் வட்டாரங்கள்.

வாஷிங்ரனைத் தளமாகக் கொண்டு இயங்கும் சர்வதேச சமாதான முன்னணி என்ற அமைப்பின் தலைவர் பஹதிர் அமின் இது குறித்துக் கூறுகையில் -

ஈராக் அதிபர் சதாமும் அவரது சகபாடிகளும் குர்டிஷ் இன ஈராக்கியர்களுக்கு இழைத்த கொடுமைக்கு இந்த மனிதப் புதைகுழி மற்றுமோர் உதாரணம் - என்றார்.


மீட்கப்பட்ட எச்சங்களில் சில......

மனித குலத்துக்கு எதிரான கிரிமினல் குற்றத்தின்கீழ் ஐ.நா. இது குறித்து ஈராக்கை விசாரிக்க வேண்டும். என்றும் அந்த அமைப்பு கோரியுள்ளது.

வளைகுடா யுத்தத்திற்கு முன்னர் இந்தப் பகுதி ஈராக்கின் கட்டுப்பாட்டின் கீழ் இருந்தது. துருக்கிய எல்லையில் இருந்ததாலும் குர்டிஷ் இனத்தவர்கள் இங்கு அதிகம் இருந்ததாலும் இங்கு வாழ்ந்த நூற்றுக்கணக்கான குர்டிஷ்கள் துருக்கிக்கு ஒத்துழைத்தார்கள் என்ற குற்றச்சாட்டின் கீழ் ஈராக்கியப் படைகளால் கொல்லப்பட்டனர். 1991ஆம் ஆண்டு - வளைகுடா யுத்தத்தின் பின்னர் - இப்பகுதி அமெரிக்க மற்றும் பிரிட்டிஷ் படைகளின் கட்டுப்பாட்டில் இருக்கின்றது. (ம)

## ஒஸாமாவின் மகள்களது ஆசிரியை தேடப்படுகின்றார்

இஸ்லாமாபாத்,பெப்.12

அமெரிக்காவால் தேடப்பட்டு வருபவரான ஒஸாமா பின்லேடனின் குடும்பத்துக்கு மிகவும் நெருக்கமானவரான ஆப்கான் ஆசிரியை ஒருவரை அமெரிக்கப் புலனாய்வுத் துறையினர் தீவிரமாகத் தேடி வருவதாகப் பாகிஸ்தானியப் பத்திரிகை ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

பின்லேடனின் மகள்களுக்கு ஆங்கிலம் கற்பித்தவரெனக் கருதப்படும் ஆலம் பீபி (வயது 30)என்ற பெண்ணே தேடப்பட்டு வருபவராவார்.

இவர் தற்போது பாகிஸ்தான் - ஆப்கான் எல்லையை ஒட்டிய மலைப் பகுதிகளில் ஒளிந்து கொண்டிருக்கலாம் என்று கருதப்படுகின்றது. (ம)

## கைதிகள் விடயத்தை மறுபரிசீலனை செய்கிறது அமெரிக்கா

நியூயோர்க்,பெப்.12

ஆப்கானிஸ்தானில் அமெரிக்கப் படைகள் கைது செய்த தலிபான் கைதிகள் தொடர்பான தமது கொள்கையை மீள்பரிசீலனை செய்யப் போவதாக அமெரிக்கா தெரிவித்துள்ளது.

ஆனால் அது தலிபான் கைதிகளுக்கு மட்டுமே பொருந்தும்; அல்கெய்டா கைதிகளுக்கு அல்ல என்றும் அமெரிக்கா கூறியுள்ளது.

குவாண்டனாமாவிலுள்ள அமெரிக்க கடற்படைத் தளத்தில் சிறை வைக்கப்பட்டுள்ள தலிபான் மற்றும் அல்கெய்டா கைதிகளை மனிதாபிமானத்துடன் சாதாரண போர்க் கைதிகளைப் போன்று நடத்தவேண்டும் என்று மனித உரிமைக்குழுக்கள் அமெரிக்காவிடம் வலியுறுத்தி வந்தன. இதனைக் கவனத்தில் எடுத்துள்ள புஷ் நிர்வாகம் தலிபான் கைதிகளைப் போர்க் கைதுகளாகக் கணித்து நடத்துவது தொடர்பாக ஆராய்வதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (ம)

## பாகிஸ்தான் மறுப்பு!

இஸ்லாமாபாத்,பெப்.12

அமெரிக்கப் பத்திரிகையாளர் டானியல் பேர்ல் கடத்தப்பட்ட சம்பவத்துடன் தொடர்புடையவர் எனக் கருதப்படும் பிரிட்டனில் பிறந்த ஷேக் ஓமர் கைது செய்யப்பட்டு விட்டதாக வெளியான செய்திகளை பாகிஸ்தான் பொலீஸார் மறுத்துள்ளனர். கைது செய்யப்பட்டவர் வேறொருவர் என்றும் ஷேக் ஓமரின் வீடு மட்டுமே கண்டுபிடிக்கப்பட்டுள்ளது என்றும் அவர்

உலக அரங்கில்

கள் கூறுகின்றனர்.

ஷேக்கின் வீட்டிலிருந்த அவரது கணனியில் இருந்தே டானியல் கடத்தப்பட்ட பின்னர் எடுக்கப்பட்ட படங்கள் ஈ-மெயில் மூலம் பத்திரிகை அலுவலகங்களுக்கு அனுப்பட்டன என்றும் பொலீஸார் தெரிவிக்கின்றனர்.

தற்போது ஷேக் பாகிஸ்தானில் இருந்து தப்பியோடிவிட்டதாகவும் அவர்கள் கூறுகின்றனர் எனினும் இந்தத் தகவல் இன்னும் ஊர்ஜிதப் படுத்தப்படவில்லை. (ம)


*1960களில் அமெரிக்கா, வியட்னாமில் வீசிய இரசாயனக் குண்டுகளால் தற்போதும் அங்கு பிறக்கும் குழந்தைகள் அங்கவீனர்களாகப் பிறக்கின்றனர். அத்தகைய குழந்தை ஒன்றுக்கு எழுதுவது தொடர்பான பயிற்சி அளிக்கப்படுவதை படத்தில் காணலாம். இத்தகைய குழந்தைகள் பிறப்பதற்கான காரணங்களை கண்டுபிடிப்பது தொடர்பான ஆராய்ச்சிகளை இரு நாடுகளும் இணைந்து மேற்கொள்கின்றன.*

*காதலால் நேர்ந்த விபரீதம்*

# காதலி உட்பட பத்துப் பேரை சுட்டுத்தள்ளினான் காதலன்!

*பின்னர் தானும் தற்கொலை!!*

கேப்டவுண்,பெப்.12

காதலியுடன் ஏற்பட்ட வாக்குவாதத்தால் ஆத்திரமுற்ற இளைஞர் ஒருவர் காதலியையும் வேறு 9 பேரையும் சுட்டுக்கொன்றுவிட்டுத் தானும் தற்கொலை செய்துகொண்டார்.

தென்னாபிரிக்காவின் கேப்டவுண் நகரில் இருந்து 560 மைல் தொலைவில் உள்ள கிழக்கு லண்டன் நகரில் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. இந்தச் சம்பவத்தில் காயமடைந்த வேறு சிலர் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

சம்பவம் குறித்து பொலீஸ் பேச்சாளர் ஸ்ரீபன் மாரிஸ் தெரிவித்ததாவது:-

புளுலானி வுக்வான் (வயது 29) என்ற அந்த இளைஞர் தனது காதலி வீட்டுக்குச் சென்று வாக்குவாதத்தில் ஈடுபட்ட பின்னர் அவரைச் சுட்டுக் கொன்றுள்ளார். பின்னர் காதலியின் பெற்றோரின் வீட்டுக்குச் சென்று அவரது தந்தை உட்பட மூவரை அங்கு சுட்டுக்கொன்றுள்ளார்.

பின்னர் வெளியே வந்து வீதியில் போனவர் வந்தவர்களை யெல்லாம் வெறித்தனமாகச் சுட்டுக்கொன்றுள்ளார். பின்னர் தன்னைத்தானே சுட்டுக் கொண்டுள்ளார் - என்றார்.

வுக்வான் இவ்வாறு நடந்து கொண்டதற்கு அவர் தனது காதலியுடன் என்ன வாக்குவாதத்தில் ஈடுபட்டார் என்பது தெரியவில்லை என்கின்றனர் பொலீஸார். ஆனால் அவர்களது காதல் முறிந்ததால் ஆத்திரமடைந்து அவர் இந்தக் காரியத்தைச் செய்திருக்கக் கூடும் என்று அவர்கள் கூறுகின்றனர்.

தென்னாபிரிக்காவில் கடந்த 16 வருடங்களில் குடும்ப உறுப்பினர்கள் பலர் இவ்வளவு கொடூரமாகக் கொலை செய்யப்பட்டது இதுவே முதற் தடவை என்று பொலீஸ் அதிகாரி ஒருவர் சொன்னார். (ம)

# மேற்குக் கரையில் மோதல்கள் மேலும் மேலும் அதிகரிக்கின்றன


விமானத் தாக்குதலில் சேதமான பலஸ்தீன கடற்படைப் பொலீஸாரின் தலைமை அலுவலகத்தில் சோதனையிடும் அதிகாரி.

ஜெருசலேம்,பெப்.12

பலஸ்தீனர்களின் கட்டுப்பாட்டுப் பகுதியில் உள்ள நப்லஸ் நகரை இஸ்ரேலிய இராணுவம் முற்றுகையிட்டு உள்நுழைந்துள்ளது. இந்த நகரைவிட்டு இஸ்ரேலியப் படைகள் வெளியேறிய இரண்டு மணிநேரத்தின் பின்னர் அந்த நகருக்குள் மீண்டும் நுழைந்துள்ளனர்.

பலஸ்தீன ஆயுததாரி ஒருவர் இரு இஸ்ரேலியப் பெண் படையினரைச் சுட்டுக்கொன்று மேலும் ஐவரைக் காயப்படுத்திய பின்னர் இந்த முற்றுகை நடவடிக்கை இடம்பெற்றது.

ஞாயிற்றுக்கிழமை தெற்கு இஸ்ரேலில் உள்ள இராணுவ முகாமில் இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் தாக்குதல் நடத்திய பலஸ்தீன ஆயுததாரிகள் இருவரும் இஸ்ரேலிய இராணுவத்தினரால் பின்னர் சுட்டுக்கொல்லப்பட்டனர்.

இந்தச் சம்பவத்தால் ஆத்திரமடைந்தே இராணுவம் நப்லஸினுள் மீண்டும் நுழைந்தது என்று அதிகாரி ஒருவர் கூறினார். நப்லுஸ்தான் தீவிரவாதிகளின் முக்கிய கோட்டையாக உள்ளது எனவேதான் அங்கு இராணுவ நடவடிக்கையைத் தீவிரப்படுத்த வேண்டியிருந்தது என்றும் அந்த அதிகாரி சொன்னார்.

20இற்கும் மேற்பட்ட டாங்கிகள் சகிதம் நகருக்குள் நுழைந்த இஸ்ரேலிய இராணுவத்தினர் நகரை முற்றுகையிட்டு தீவிர சோதனைகளை நடத்தியதாக நேரில் கண்டவர்கள் தெரிவித்தனர்.


நப்லஸ் வீடுகளில் சோதனை நடத்தும் இஸ்ரேலியர்கள

இதேவேளை - பலஸ்தீன அதிபர் யஸீர் அரபாத்தின் உத்தியோகபூர்வ அலுவலகக் கட்டடம் அமைந்துள்ள வளாகத்தில் இஸ்ரேலிய எப் - 16 ரக விமானங்கள் ஞாயிறன்று இரவு குண்டுத் தாக்குதல்களை நடத்தியுள்ளன. இந்தத் தாக்குதலில் பலஸ்தீன கடற்படைப் பொலீஸாரின் தலைமை அலுவலகம் தரைமட்டமானது.

அன்றிரவு இஸ்ரேலின் அபாச்சி ரக ஹெலிகள் ஜபாலியா, பிட் லஹூ ஆகிய இடங்களில் உள்ள இரும்புத் தொழிற்சாலைகள் மீது ஏவுகணைத் தாக்குதல்கள் நடத்தின. இதில் ஐ.நா. பணியாளர்கள் இருவர் உட்பட 30இற்கும் மேற்பட்டவர்கள் காயமடைந்தனர். (ம)

# வூமேரா முகாமைப் பார்வையிட ஐ.நா. அதிகாரிக்கு அனுமதி

சிட்னி,பெப்.12

தனது சர்ச்சைக்குரிய வூமேரா அகதிகள் முகாமில் உள்ள புகலிடம் கோருவோரையும் முகாமையும் பார்வையிடுவதற்கு ஐ.நா.மனித உரிமைகள் ஆணைக்குழு அதிகாரிக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளதாக ஆஸ்திரேலியா தெரிவித்துள்ளது.

ஐ.நாவின் விசேட தூதுவர் ஒருவரை வூமேரா முகாமுக்குச் சென்று பார்வையிட அனுமதிக்குமாறு ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் மேரி ஹொபின்சன் கடந்த வாரம் ஆஸ்திரேலிய அரசிடம் கோரி இருந்தார். இதனை அடுத்தே இந்த அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

கடந்த மாதம் வூமேரா முகாமில் இருந்தவர்கள் தமது புகலிடக் கோரிக்கை மனுக்களை விரைவில் பரிசோதித்து தம்மை ஆஸ்திரேலியாவில் தங்கியிருக்க அனுமதிக்குமாறு கோரி 16 நாள்கள் உண்ணாவிரதப் போராட்டம் நடத்தியமை தெரிந்ததே. (ம)

# இலங்கை இனப்பிரச்சினையை தீர்ப்பதில் இந்தியாவுக்கு தார்மீகக் கடமை உண்டு

இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இருக்கும் இணைப்பும் பிணைப்பும் இன்று நேற்று ஏற்பட்டவையல்ல.

சூரியனிலிருந்து அதன் ஒரு பாகம் வெடித்துக் கடலில் வீழ்ந்து சூடாறி பூமியாக உருப்பெற்றபோதே அது ஏற்பட்டதொன்று. மனித இனம் தோன்றிய குமரிக் கண்டத்தின் வட பகுதியாக இன்றைய தென்னிந்தியா இருந்ததென்பது வரலாற்று உண்மை.

இலங்கையை மையமாகக் கொண்ட குமரிக் கண்டத்தில்தான் உலகின் ஆதிமனித இனமே தோன்றியது என்பது வரலாற்று வல்லுநர்களின் முடிவு.

குமரிக்கண்டத்தைப் பல்வேறு கடற்கொந்தளிப்புகள் சிதைத்து சீரழிந்தன. கடலாக இருந்த ஆசியாக் கண்டம் திடலாக மாறியது.

- இவ்வாறு வரலாறுகள் தெளிவுபடுத்துகின்றன.

கடற்கொந்தளிப்பில் இருந்து உயிரைக் காப்பாற்ற திடல்களை நோக்கி மக்கள் முன்னேறிச் சென்றார்கள். அவ்வாறு முன்னேறிச் சென்றவர்கள் முதலிற் சென்று அமர்ந்த இடம் இந்தியா என்பது சரித்திரம். எனவே இந்தியா, இலங்கையரின் புலம்பெயர்ந்த நாடு. இன்றைய இந்தியாவுக்கு இலங்கை தாயகம். இலங்கையில் தோன்றிய மொழி தமிழ். வழிபாடு சைவம். அதாவது லிங்க வழிபாடு. இந்த வழிபாடு உலகின் பல பாகங்களிலும் மக்களின் ஆரம்ப வழிபாடுகளாக இருந்ததற்கு போதிய சான்றுகள் இன்றும் இருக்கின்றன. அது மட்டுமன்றி இலங்கையில் சிவவழிபாட்டுச் சின்னங்கள் நிறைய இருக்கின்றன.

இன்றைய தென்னிந்தியா அன்றைய இலங்கையின் வடபகுதியாக இருந்தது. குமரிக் கண்டத்தில் ஏற்பட்ட கடற்கோள்களால் மக்கள் வடக்கு நோக்கிப் பரவி - உலகமெலாம் சென்று இன, மொழி, மத மாற்றங்களை காலக்கிரமத்தில் ஏற்படுத்திக் கொண்டார்கள்.

- இவ்வாறு அறிஞர் ஸ்லேற்றரும் அறிஞர் ஈரோஸ் பாதிரியாரும் கூறுகிறார்கள்.

இக்கருத்தையே *"தென்னாடுடைய சிவனே போற்றி என்னாட்டவர்க்கும் இறைவா போற்றி"* என்ற பழம் பாடல் நினைவு கூறுகிறது.

எனவே இலங்கைக்கும் இந்தியாவுக்கும் தொப்புல்கொடி உறவுண்டு. காலம் கடந்துவிட்டதாலும் பல மாற்றங்கள் நாட்டுக்குள் ஏற்பட்டுவிட்டபோதிலும் இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இருக்கும் இணைப்பும் பிணைப்பும் சிறப்பானவை. மதரீதியாகவும் பண்பாடுரீதியாகவும் கலாசாரங்கள் மூலமாகவும் அறுக்கமுடியாத இறுக்கமாக அவை அமைந்துள்ளதை யாரும் மறுக்கமுடியாது.

இந்தியாவின் வித்தான சமணமும் - பௌத்தமும் இந்த நாட்டை உள்வாங்கியுள்ளது ஊரறிந்த உண்மை. எனவே இந்தியாவில் வாழும் மக்களுக்கு இலங்கையின் பூர்வீகத்தோடு நிரம்பிய தொடர்பு உண்டு. மற்றும் பாசமும் பரவலாக உண்டு.

### தார்மீகக் கடமை

ஆகவே எக்காரணம் கொண்டும் இந்தியா இலங்கை மேல் தனக்குள்ள தார்மீகக் கடமைகளை ஒதுக்கிவிட முடியாது.

இலங்கை இன்று இந்தியாவுக்கு அந்நியநாடாக இருக்கலாம். ஆனால இந்திய மக்களின் பூர்வீகத்தாயகம் இலங்கை. அதாவது பிரித்தானியாவுக்கும் அமெரிக்காவுக்கும் உள்ள தொடர்பு இலங்கைக்கும் இந்தியாவுக்கும் உண்டு. இலங்கையின் சுக, துக்கங்களில் பங்குபெறுகின்ற பாசமும் நேசமும் உள்ள பங்காளர்கள் இந்தியர்கள்.

இக்காரணத்தினால்தான் இலங்கையில் இனப்பிரச்சினை உக்கிரமடைந்தபோது அன்றைய இந்தியப் பிரதமரான இந்திராகாந்தி உடன் நடவடிக்கையில் இறங்கி இலங்கை அரசைத் தட்டிக்கேட்டார்.

1983ஆம் ஆண்டு இலங்கையை ஆண்ட அரசே திட்டமிட்டு நடத்திய கொடூரமும் கொடுமையும் நிறைந்த வன்செயலால் பெருமளவு தமிழர்கள் பாதிக்கப்பட்டனர். அகதிகளாக இந்தியா சென்ற இந்த மக்களை ஆதரித்ததோடு, சகல போராட்டக் குழுக்களையும் உசார்படுத்தி, உண்டி கொடுத்து, உறைவிடம் வழங்கி, யுத்தப் பயிற்சியும் அளித்தார் இந்திரா. *"தாண்டாவிட்டாலும் தசையாடும்"* என்பது இதன் மூலம் புரிந்தது.

### விமானம் மூலம் உணவுப் பொட்டலம்

வடமராட்சிப் போரை நடத்திய இலங்கை அரசைத் தடுத்துநிறுத்தியதுடன் - போரைத் தொடர அனுமதியாது விமானம் மூலம் உணவுப் பொட்டலங்களைப் போட்டதுடன் - இலங்கை மேல் தனக்குள்ள தார்மீகக் கடமையைத் தொட்டுக்காட்டியது இந்தியா.

**பூ.ம.செல்லத்துரை**

அதுமட்டுமல்ல, அன்று இந்தியத் தூதுவராக இருந்த டிக்ஷிற், அன்றைய நிறைவேற்று அதிகாரம் கொண்ட இலங்கை ஜனாதிபதி ஜே. ஆரை அவர் வீட்டில் சந்தித்து *"இப்போரை நீங்கள் வெல்ல இந்தியா அனுமதிக்காது"* என்று கூறினார். இதை ஜே.ஆர்.தனது வாழ்க்கைக் குறிப்பில் குறித்துள்ளார்.

இத்தனைச் செயற்பாடுகளுக்கும் காரணம் என்ன? இலங்கை மக்களுக்கும் இந்திய மக்களுக்கும் உள்ள பூர்வீக மரபணு உறவுமுறை இரத்தத் தொடர்பேயாகும்.

இரத்தம் தண்ணீரிலும் தடிப்பானது என்பதை உறுதி செய்தது. தென்னாட்டரசர்கள் இலங்கையை ஆண்டுள்ளார்கள். கலிங்கத் திராவிடர்கள் ஈழத்தை ஆண்டுள்ளார்கள்.

### இந்திய வம்சாவளியினர்

கண்டியின் அரச பரம்பரை இந்தியத் தமிழரசு பரம்பரையாகும். மனனரோடு வந்த இந்தியக் குடிகள் இங்கே குடியமர்ந்து இலங்கைப் பிரஜைகள் ஆகிவிட்டார்கள்.

பிரித்தானியர் காலத்தில் தேயிலை, றப்பர் தோட்ட வேலைகளுக்காகத் தென்னிந்தியத் தமிழர்கள் இந்த நாட்டில் குடியமர்த்தப்பட்டனர். இன்று மலைநாட்டில் வாழும் 10 லட்சத்திற்கு மேற்பட்ட தமிழர்கள் இந்திய வம்சாவழியினர். இத்தகைய பொறுப்பும் கடமைகளும் இந்தியாவுக்கு இலங்கை மேலுண்டு.

இந்தப் பொறுப்புக்களையும் கடமைகளையும் இந்திய அரசு தட்டிக் கழிக்கமுடியாது. இவ்வாறு பெறுமதி வாய்ந்த, பாசமும் பற்றுமிருந்தபடியால்தான இந்திய அரசு வான்வெளியூடாக இலங்கையின் இறைமைக்கே அச்சுறுத்தலை உண்டாக்கும் வகையில் உணவுப் பொட்டலங்களைப் போட்டது; இலங்கை அரசோடு ஒரு தலைப்பட்சமான ஒப்பந்தத்தைச் செய்தது. பாதிக்கப்பட்ட தமிழரைக் கலந்தாலோசியாமலே இந்தியா இந்த முடிவுகளை எடுத்தது.

அதன் பலன் இலங்கை அரசு ஒப்பந்தத்தை ஏமாற்றத் தொடங்கியது. அரசைத் தட்டிக்கேட்க வேண்டிய இந்தியா, தன் படைப்பலத்தின் மூலம் தமிழரைக் கொன்று குவித்தது; தமிழ்ப் பெண்களைப் பாலியல் வல்லுறவுமூலம் பழிவாங்கியது.

### மூத்த சகோதரன்

இலங்கைத் தமிழர் இந்தியாவையோ அல்லது இந்திய மக்களையோ என்றும் வெறுப்பவர்களோ பகைப்பவர்களோ அல்லர் என்றும், மூத்த சகோதரன் என்ற பற்றோடும் பாசத்தோடும் நேசிப்பவர்கள், பழகுகின்றவர்கள். இதன் காரணத்தால்தான் இந்திய அரசு ஒருதலைப்பட்சமாகச் செய்த ஒப்பந்தத்தையும், அதன்மூலம் இந்திய அமைதிப்படை நடத்திய எத்தனையோ அட்டகாசங்களையும் மன்னித்து மறந்துவிட்டார்கள்.

அத்துடன், இந்திய மண்ணே இனப்பிரச்சினையைத் தீர்க்கும் தளமாக அமையவேண்டும் எனக் கோரியும் வருகிறார்கள்.

இக்கோரிக்கை நியாயமான, நீதியான கோரிக்கை என்பதை மனிதநேயம்மிக்க அனைவரும் ஏற்றுக்கொள்வார்கள். அதை இந்தியாவும் ஏற்று, இதுவரை தமிழர்மீது கடைப்பிடித்துவந்த தப்பான - தவறான - அணுகுமுறையை முற்றாக அகற்றி, புலிகளின கோரிக்கையை மனிதாபிமான நிலையில் பரிசீலனை செய்து, இனப்பிரச்சினை சம்பந்தமாகத் தமக்குள்ள தார்மீக உரிமையை நிலைநாட்ட முன்வரவேண்டும் இதன்மூலமே தென்கிழக்காசியாவின் தலைமையில் இந்தியா தனக்குள்ள நிலையை ஸ்திரப்படுத்திக்கொள்ள முடியும்.

அரசியலில் இன்றைய எதிரி நாளைய நண்பன். இது இந்தியாவுக்குப் புதிதல்ல. *"இன்னா செய்தாரை ஒறுத்தல் அவர்நாண நன்னயம் செய்துவிடல் வேண்டும்"* என்பது இந்தியா உலகுக்கு அளித்த விலைமதிக்கமுடியாத தத்துவம். இன்று இந்தச் சிறந்த, உகந்த தத்துவத்தின் உண்மைத் தன்மை, இந்தியா இலங்கைத் தமிழர் பிரச்சினையில் எடுக்கும் முடிவின்மூலம் நிரூபிக்கவேண்டிய பெரும் பொறுப்பில் இருக்கின்றது.

என்ன இருந்தாலும் இந்தியா ஒரு பெரியநாடு. சுதந்திரம் பெற்றபோதே 'எதிர்கால இந்தியா இன, மொழிப் பிரச்சினையால் சீரழியக் கூடாது, மதப்பூசல்களால் பிளவுபடக்கூடாது' என்ற தூரநோக்கோடு செயற்பட்ட நாடு.

அதைப்போல இலங்கை இனப்பிரச்சினையில் தனக்குள்ள தார்மீகப் பொறுப்பைத் தட்டிக்கழிக்காது, புலிகளின் கோரிக்கையைப் பெருமனதோடு ஏற்றுக்கொள்ள வேண்டும்.

பழைய அனுபவங்களை மையமாகவைத்து ஒரு சிறந்த, உகந்த அரசியல் முடிவை ஏற்படுத்த இந்தியா முன்வருமென அரசியல் ஆய்வாளர்கள் கூறுகின்றார்கள்.

*நன்றி: 'சுடர் ஒளி'*

## மெய்வன்மைப் போட்டிகள்

நல்லூர் ஸ்தான சி.சி.த.க.பாடசாலையின் இல்ல மெய்வன்மைப் போட்டி நாளை புதன்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு அதிபர் த.நாகராசா தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக நல்லூர் கல்விக்கோட்ட உதவிக் கல்விப் பணிப்பாளர் திருமதி ச. காங்கேயனும் சிறப்பு விருந்தினராக யாழ் மாவட்ட மேலதிக மாகாணக் கல்விப் பணிமனையின் நிர்வாக உத்தியோகத்தர் பு.புலேந்திரராஜாவும் கலந்துகொள்வர். (க-10)

☆ ☆ ☆

சுன்னாகம்,பெப்.12

ஏழாலை ஸ்ரீமுருகன் வித்தியாலயத்தின் வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டிகள் நாளை புதன்கிழமை பிற்பகல் 1.30 மணியளவில் நடைபெறும்.

அதிபர் நா.சிவசிதம்பரலிங்கம் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் உடுவில் கல்விக் கோட்டப் பணிப்பாளர் அ.தற்பராவந்தன் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார். (க-27)

## பரிசளிப்பு விழா

யாழ்.வைத்தீஸ்வராக் கல்லூரியின் பரிசளிப்பு விழா இன்று செவ்வாய்க்கிழமை முற்பகல் 10 மணிக்கு கல்லூரியின் விவேகானந்தர் மண்டபத்தில் நடைபெறும்.

யாழ்.வலயக்கல்விப் பணிப்பாளர் திருமதி செ.மகாலிங்கம் பிரதம விருந்தினராகவும், யாழ்.கோட்டக் கல்வி உதவிக் கல்விப்பணிப்பாளர் ஆ.இராஜகோபால் சிறப்பு விருந்தினராகவும் கலந்துகொள்வர். (க-51)

## 'போரூட்' நிறுவன உதவிகளுக்கு பாராட்டு

கரணவாய் தெற்கு செல்வபுரத்தில் வறிய மக்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துவதில் போரூட் நிறுவனத்தின் உதவிகளுக்கு பாராட்டுத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

2001 ஆம் ஆண்டுக்கான வேலைத் திட்டத்தில் 19 வீடுகள், 12 குழாய்க் கிணறுகள், 17 மலசலகூடங்கள், 2 பொதுக் கிணறுகள் மற்றும் இளங்கோ சனசமூக நிலையத்துக்கான புதிய கட்டடம் என்பன அமைக்கப்பட்டுள்ளன. 2002 ஆம் ஆண்டுக்கான வேலைத்திட்டத்தில் 10 வீடுகள், 7 மலசலகூடங்கள், 4 குழாய்க்கிணறுகள், 2 பொதுக் கிணறுகள், ஒரு பொது மலசலகூடம் என்பன கட்டப்படவுள்ளன. (க-11)

## கிணற்றில் மிதந்த சடலம் மீட்பு

யாழ்ப்பாணம்,பெப்.12

கிணற்றில் இருந்து மீட்கப்பட்டதாகத் தெரிவித்து ஊதிப் பருத்த நிலையில் இனந்தெரியாத ஒருவரின் சடலம் ஒன்றைக் கோப்பாய்ப் பொலீஸார் நேற்றுமுன்தினம் இரவு யாழ். ஆஸ்பத்திரியில் ஒப்படைத்தனர்.

கோண்டாவில் பஸ் டிப்போவில் இருந்து சுமார் 500 மீற்றர் தூரத்தில் உள்ள கிணறு ஒன்றில் இச்சடலம் காணப்பட்டதாகவும், அக்கிணற்றில் தூண்டில் போட்டு மீன்பிடித்து விளையாடச் சென்ற சில சிறுவர்கள் சடலத்தைக் கண்டு தெரிவித்ததாகவும் கூறி அங்குள்ளவர்களால் கோப்பாய் பொலீஸுக்கு தகவல் கொடுக்கப்பட்டது.

பொலீஸார் சடலத்தை மீட்டு பிரேத பரிசோதனையின் பொருட்டு ஆஸ்பத்திரியில் ஒப்படைத்தனர்.

சடலம் மரண விசாரணையின் பொருட்டும் இனம் காணும் பொருட்டும் ஆஸ்பத்திரி பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது. (க-15)

## வெங்காயச் செய்கை அழிந்து நாசம்

அச்சுவேலி,பெப்.12

தொடர்ச்சியாகப் பெய்த கடும் மழையால் வெங்காயப் பயிர்ச் செய்கை பெருமளவில் சேதமடைந்து அழிந்துள்ளதால் விவசாயிகள் பெரும் பாதிப்புக்குள்ளாகியுள்ளனர்.

அச்சுவேலி, புத்தூர், ஆவரங்கால், சிறுப்பிட்டிப் பகுதியில் பெருமளவில் செய்கை பண்ணப்பட்ட வெங்காயப் பயிர்ச்செய்கை வெள்ளதால் தாழ் உடைந்து பெருமளவில் நாசமாகி விட்டதாக விவசாயிகள் கவலை தெரிவிக்கின்றனர். (க-11)


## யாழ்ப்பாணம் மாவட்டக் கூட்டுறவுச் சபை (வ.து)
### மாவட்ட மகளிர் குழு நடத்தும்
## அனைத்துலக பெண்கள் தினப் போட்டிகள்

01. பாடசாலை மாணவர்களுக்கான பேச்சு, கட்டுரைப் போட்டிகள்

| போட்டி | விடயம் | நேரம் |
|---|---|---|
| தரம் 10, 11 பேச்சு | மகளிர் அபிவிருத்திப் பாதையின் தடைக் காரணிகள் | 5 - 6 நிமிடம் |
| தரம் 12, 13 பேச்சு | எமது சமூக கலாசாரங்களைப் பேணுவதில் பெண்களின் பங்கு | 5 - 6 நிமிடம் |
| தரம் 10, 11 கட்டுரை | மகளிர் தலைமைத்துவம் | 45 நிமிடம் |
| தரம் 12, 13 கட்டுரை | பெண்களின் சமூக பொருளாதார மேம்பாட்டில் கூட்டுறவு இயக்கத்தின் பங்கு | 1 மணி |

02. மகளிர்களுக்கான கவிதைப் போட்டி - ஆர்வம் உள்ள மகளிர்கள் எவரும் பங்குபற்றலாம்.
விடயம் - எமது பிரதேசத்தில் மகளிர் எதிர்நோக்கும் பிரச்சினைகளும் அதற்கு கூட்டுறவு இயக்கமூலம் பெறக்கூடிய தீர்வுகளும்.
நேரம் - 3 நிமிடம்

03. கூட்டுறவுச் சங்கங்களுக்கிடையேயான நாடகப் போட்டி, கூட்டுறவுச் சங்கங்களின் சிறுவர் பாடசாலை குழு நடனப் போட்டிகள் தொடர்பான விவரங்கள் சங்கங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

❖ விண்ணப்பங்களை மாவட்டச் செயலாளர், யாழ்ப்பாணம் மாவட்டக் கூட்டுறவுச் சபை, கூட்டுறவாளர் வீரசிங்கம் மண்டபம் 2ஆம் மாடி, யாழ்ப்பணம் என்ற முகவரிக்கு 28.02.2002ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பி வைக்கவும்.
❖ மாணவர்கள் அதிபரின் சிபார்சுடன் விண்ணப்பிக்கவும்.
❖ மாணவர்களுக்கான பேச்சு, கட்டுரைப் போட்டிகள் 03.03.2002 ஞாயிற்றுக்கிழமை காலை 9.00 மணிக்கும், கவிதைப் போட்டிகள் அன்றைய தினம் பிற்பகல் 2 மணிக்கும் இல.14, மணிக்கூட்டு வீதியில் அமைந்துள்ள சபையின் பயிற்சி நிலையத்தில் நடைபெறும்.

போட்டியாளர்களுக்கு தனிப்பட்ட அழைப்பு அனுப்பப்படமாட்டாது.

(C/20699) - மாவட்டச் செயலாளர்.



## 31ஆம் நாள் நினைவஞ்சலி

தோற்றம் 23 - 05 - 1936



மறைவு 13 - 01 - 2002

## அமரர் இளையவி கந்தசாமி

பாசமிகு குடும்பத் தலைவனாய்
அன்போடும் பண்போடும்எம்மை வளர்த்து
நல்வழிகாட்டிய அன்புத் தந்தையே!
தெய்வமே! மாதம் ஒன்று கடந்த
போதும் உங்கள் நினைவுகள்
எம்மை விட்டு என்றும் அகலாது!
ஆறாது எம் நெஞ்சம்!

*உங்கள் ஆத்மசாந்திக்காக இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.*

*என்றும் துயரத்தில் வாடும்:*
இராசம்மா *(மனைவி)*, பிள்ளைகள்
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

*க.செல்வரத்தினம் (ரவி)*
*வட்டு கிழக்கு சித்தன்கேணி.*

(557)

**உதயன்**

## யாழ்ப்பாண அபிவிருத்தி

யாழ்.மாவட்டத்தின் அபிவிருத்தி மற்றும் புனர்வாழ்வு நடவடிக்கைகளைத் துரிதப்படுத்தும் நோக்குடன் 'யாழ்ப்பாணத் திட்டம்' என்னும் புதிய அபிவிருத்திச் செயற்றிட்டம் ஒன்றை யாழ்.செயலகம் தயாரித்து வருவதாகச் செய்தி வெளியாகி இருக்கிறது.

இதற்கான ஆலோசனைகள், திட்ட வரைவுகளைப் பிரதேசரீதியாகச் சேகரிக்கும்பணி ஆரம்பிக்கப்பட்டிருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த இரு தசாப்தங்களுக்கும் கூடிய காலப்பகுதியில் தொடர்ந்துவந்த போரின் ஒட்டுமொத்த அழிவுகளின் சாட்சியாக விளங்குவது யாழ்.குடாநாடு.

தமிழ்மக்கள் தங்கள் இருப்பை - சுயநிர்ணய உரிமையை - வலியுறுத்தி ஆரம்பித்த விடுதலைப்போரை ஆயுதப் பலம்கொண்டு அடக்க ஸ்ரீலங்கா அரசுகள் எப்போது முயற்சிக்கத் தொடங்கினவோ அன்றுமுதல் இன்றுவரையான காலப்பகுதியை தமிழ் மக்களைப் பொறுத்தவரை 'அழிவுக் காலம்' என்று சொல்லலாம்.

ஒருகாலத்தில் வளங்கொழிக்கும் வாழ்க்கையை அனுபவித்தவர்கள் குடாநாட்டு மக்கள். இன்று போரின் அழிவுகள், எச்சங்கள் மட்டுமே எங்கும் விஞ்சிக்கிடக்கின்றன.

ஸ்ரீலங்கா அரசபடைகளின் பேரழிவுத் தாக்குதல்களின் கோரவடிவத்தை யாழ்நகரின் பெரும் பிரதேசத்தில் இன்றும் காணக்கூடியதாக உள்ளது. குடாநாட்டின் வர்த்தக மையப்பகுதியாக விளங்கிய சாவகச்சேரி, பூகம்பம் தாக்கிய பிரதேசம்போல இடியுண்டு கிடக்கின்றது. இதேபோன்று எங்குமே போரின் அழிவுக் காட்சிகள்.

பொருளாதாரத்தின்மீதும், பௌதிக வளங்கள்மீதும் போர் ஏற்படுத்திய தாக்கங்கள் இலகுவில் இட்டு நிரப்பிவிடமுடியாதவை. குடாநாட்டுச் சமூகம் இவற்றிலிருந்து மீண்டும் முந்திய நிலைக்குத் திரும்ப நூற்றாண்டு இடைவெளிகூடத் தேவைப்படலாம்.

தமிழ்மக்களின் நிவாரணப் பணிகளுக்காக - தமிழ்ப் பிரதேசங்களின் அபிவிருத்திக்காக - மேம்பாட்டுக்காக - வெளிநாட்டு அரசுகளாலும், அமைப்புகளாலும் பெருந்தொகை நிதி உதவிகள் வழங்கப்பட்டபோதெல்லாம் ஆட்சியாளர்கள் அதில் ஒருசிறுபகுதியை ஒப்புக்குக் கிள்ளித் தெளித்துவிட்டு, பெரும் பகுதியை அதேமக்களை அடக்கி, ஒடுக்குவதற்கான போருக்குப் பயன்படுத்தி வந்தமை கடந்தகால கசப்பான உண்மை.

'சமாதானத்துக்கான போர்' என்று கூறிக்கொண்டு தமிழ் இனத்தையே அழித்தொழிக்கமுயன்ற கடந்த ஆட்சியிலும் இந்த நிலைமையே இருந்துவந்தது.

தமிழ் மக்களுக்கு விமோசனம் அளிப்பதாகக் கூறிக்கொண்டு, மறுபுறத்தில் அதேமக்கள்மீது போரைத் திணித்த ஜனாதிபதி குமாரதுங்க தலைமையிலான அரசு, குடாநாட்டை அபிவிருத்தி செய்வதாக வெளியுலகை நம்பவைக்க நாடகமாடியதும் - அதற்குத் துணைபோன தமிழ்க்கட்சி ஒன்றைக் கடந்த தேர்தலில் குடாநாட்டு மக்கள் நிராகரித்து ஒதுக்கியதும் - நாம் அறிந்தவையே.

ஆட்சி மாற்றத்தோடு நாட்டில் நல்லெண்ண சூழல் உருவாகிவருகிறது. இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக் குடாநாட்டு மக்களின் அன்றாடப் பிரச்சினைகளைத் தீர்க்கவும், அபிவிருத்திப் பணிகளைத் தொடங்கவும் எடுக்கப்படும் முயற்சிகள் வரவேற்கப்பட வேண்டியவைதான். ஆனால் அபிவிருத்தி என்பது நீண்டகால நோக்குடன் விரிவான ஆலோசனைகளின் அடிப்படையில் திட்டமிடப்படவேண்டும். அரசியற் செல்வாக்குகளுக்கு அப்பால், சுயாதீனமான முறையில் முன்னெடுக்கப்பட வேண்டும்.

ஒருபுறம் குண்டுகள் வீழ்ந்து கொண்டிருக்க மறுபுறம் ஆலயங்களைப் புனரமைத்து வர்ணம் பூசுவது அபிவிருத்தி அல்ல.

வாழ்விடங்கள்மீது இராணுவ நடவடிக்கைகளை மேற்கொண்டு மக்களை ஓடஓட விரட்டியடித்துவிட்டு, அதேமக்களுக்கு நிவாரணம் வழங்கத் திட்டங்களைத் தீட்டுவது புனர்வாழ்வுப் பணி அல்ல.

போரையும், அபிவிருத்தியையும் ஒருங்கே முன்னெடுப்பது என்பது யதார்த்தத்துக்குப் புறம்பானது. போர் ஓய்ந்து, நிரந்தர சமாதானம் உறுதியானபிறகே அபிவிருத்தி சாத்தியம். சமாதானம் என்ற உறுதியான அடித்தளம் மீதுதான் அபிவிருத்தி கட்டியெழுப்பப்படவேண்டும்.

தமிழ் மக்களைத் தெளிவான அரசியற் பாதையில் வழிநடத்தும் சரியான தலைமைத்துவத்தின் - சக்திகளின் - கீழேயே அபிவிருத்திப் பணிகளும் முன்னெடுக்கப்படவேண்டும். அதற்கான சூழ்நிலை நிரந்தர சமாதானத்தின் பின்னரே உருவாகமுடியும். அதற்கு முன் தமிழ்ப் பிரதேசங்களை அபிவிருத்தி செய்ய முயல்வது அரைவேக்காட்டு அபிவிருத்தியாகவே இருக்கும்.

'நிரந்தர சமாதானம் இன்றி நிலையான அபிவிருத்தி இல்லை' என்பதை உணர்வோம்; உணர்த்துவோம்.

# தென்மராட்சி மக்களின் உடைமைகள் தொடர்ந்து சூறையாடப்படும் அவலம்

## தடைமுகாம்கள் இல்லாததால் திருடர் கைவரிசை

யாழ்ப்பாணம்,பெப்.12

கண்டி வீதி வழியாக சாவகச்சேரிக்குச் செல்வதற்கு அனுதிக்கப்பட்டிருப்பதைத் தொடர்ந்து யாழ்ப்பாணத்திலிருந்து செல்லும் திருட்டுப்பேர் வழிகள் பெறுமதி வாய்ந்த பொருள்களைத் திருடிவருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

ஆலயங்களிலுள்ள வெள்ளி, வெண்கலப் பொருள்கள், சில்வர் பொருள்கள், அலுமினிய வகைகள் முதலியனவும் -

வீடுகளில் பூட்டு, பிணைச்சல், ஜன்னல், பிரேம், கிறில் என்பனவும் இவ்வாறு திருடப்பட்டு யாழ்ப்பாணத்துக்குக் கொண்டுவரப்படுகின்றன.

பஸ்களில் இவ்வாறான திருட்டுப் பொருள்களை ஏற்றிச்செல்வதை அவதானிக்க முடிகிறது.

கண்டி வீதியில் தடைமுகாம்கள் இல்லாத சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி திருடப்படும் பொருள்கள் கடத்திவரப்படுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

அண்மையில் திருட்டில் ஈடுபட்ட மூவர் பிடிக்கப்பட்டு, நுணாவிலில் பொலீஸாரிடம் ஒப்படைக்கப்பட்டனர்.

இவ்வாறு பொருள்கள் திருடப்பட்டு வெளியிடங்களுக்கு எடுத்துச் செல்லப்படுவதைத் தவிர்க்க நடவடிக்கை எடுக்கவேண்டுமென பிரதேசவாசிகள் தென்மராட்சி பிரதேச செயலரைக் கோரியுள்ளனர்.

இதேவேளை -

மட்டுவில், நுணாவில், கைதடி - நுணாவில் பகுதிகளில் சட்டவிரோதமாக மரங்களைத் தறிக்கும் நடவடிக்கைகளிலும் திருட்டுப் பேர்வழிகள் ஈடுபட்டுவருகிறார்கள். இவற்றை மலிவான விலையில் கொள்வனவு செய்து 'பாஸ்' நடைமுறையின்கீழ் வலிகாமம் பகுதிக்குக் கொண்டுவரப்படுவதாகவும் கூறப்படுகிறது.

இது தொடர்பாக இப்பிரதேச மக்கள் மகஜர் ஒன்றை தென்மராட்சி பிரதேச செயலருக்கு அனுப்பி வைத்துள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது. (க-27)

## நாட்டு நடப்பு

### மாதர்களை தீமூட்டி கொன்ற காதை

"ஐய்யோ" என அலற அடித்துதைத்து கொன்றுவிட்டு
மெய்யாய் அவர் உடல்கள் மிக குருதி தனில் மிதக்க
கையால் அவர் உடைமைகளைக் களைந்தெடுத்த பின்னர்
மையவே தீமூட்டி விட்டு பாதகர்கள் மறைந்தார்.

வையத்தில் இதுபோல் கொடுமை வரலாறு கண்டதில்லை
தையலரைக் கொன்றுவிட்டு தணலிலே பொசுக்கி விட்ட
பஞ்சமா பாதகர்தம் படுகொலையைக் கண்டு
நெஞ்சதனில் தாங்கிவிட்ட நெஞ்சுரம் தானெவ்னே!

சைவத்தை தமிழ்கண்ட நீதிதனைக் காக்கும்
வையத்து நாடென்று வான்புகழ கூறும்
பண்புள்ள பைந்தமிழர் வாழுமிந்த நாட்டின்
பண்பெல்லாம் பார் பழிக்க பறிபோயிற்றன்றோ?

- விகடகவி.

ஜீ.ஜீ.பொன்னம்பலத்தின் நினைவு நிகழ்வில் ரவிராஜ் எம்.பி.பேச்சு:

# கூட்டமைப்பு அடிப்படை கொள்கையில் இருந்து எந்தச்சந்தர்ப்பத்திலும் விலகிச்செல்லவில்லை

## அப்படி ஏதும் நேர்ந்தால் தட்டிக்கேட்க உரிமையுண்டு

யாழ்ப்பாணம்,பெப்.12

எமது கூட்டமைப்பு பொதுக் கொள்கையின் அடிப்படையில்தான் உருவாக்கப்பட்டது. அந்தக் கொள்கையில் இருந்து எவரும் எச்சந்தர்ப்பத்திலும் விலகவில்லை. அப்படி விலகிச்சென்றால், தட்டிக்கேட்க அனைவருக்கும் உரிமையுள்ளது. ஆனால் எமக்குள் தனிப்பட்ட சில மனக்கசப்புகள் வந்தாலும், அவை பெரிதுபடுத்தப்பட்டு விடுகின்றன.

- இவ்வாறு தெரிவித்தார் தமிழ் கட்சிக் கூட்டமைப்பின் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ந.ரவிராஜ்.

கடந்த சனியன்று தமிழர் விடுதலைக் கூட்டணியின் யாழ்.தலைமை அலுவலகத்தில் நடைபெற்ற அமரர் ஜீ.ஜீ.பொன்னம்பலத்தின் 25ஆவது ஆண்டு நிறைவு நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றியபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

யாழ்.மாநகரசபை உறுப்பினர் க.பரராஜசிங்கம் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் தொடர்ந்து உரையாற்றிய ரவிராஜ் கூறியதாவது:-

ஒரு குடும்பத்தில் சகோதரர்களிடையே பல மனக்கசப்புகள், சண்டை சச்சரவுகள் வருவது சகஜம். அவை சில தினங்களில் மறைந்துவிடும். பின்னர் சமாதானம் ஏற்பட்டு சகஜநிலை தோன்றும்.

ஆனால் சில ஊடகங்கள் இவ்வாறான விவகாரங்களை எல்லாம் பெரிதுபடுத்தி செய்திகளை வெளியிட்டு வருகின்றன. கூட்டமைப்பினராகிய நாம் எமது பொதுக்கொள்கையிலிருந்து விலகிச் செயற்படுவோமானால் அதுகுறித்து பொதுமக்கள் எவரும் தட்டிக்கேட்கலாம். இதற்கு அனைவருக்கும் உரிமை உண்டு.

கூட்டமைப்பு உருவாக்கப்பட்டதன் நோக்கமே தமிழ் மக்கள் அனுபவித்து வரும் துன்ப, துயரங்கள் நீங்கி, தங்களின் சொந்த மண்ணில் சுதந்திரமாகத் தலைநிமிர்ந்து வாழவேண்டும் என்பதற்காகவே.

விடுதலைப் புலிகளைப் பொறுத்தவரையில் தமிழ் மக்களுக்கு பாதகமான எதனையும் ஏற்கவில்லை. அதனாலேயே அவர்களுடன் பேசினால்போதும் என்ற முடிவை எடுத்துள்ளோம். அவர்களும் தமக்கு உதவியாக தமிழர் கூட்டமைப்பு இருக்க வேண்டும் என்று கூறியுள்ளார்கள்.

தமிழ் மக்கள் பட்டதுன்பத்தை கண்டு, காலத்தின் தேவை அறிந்து ஒரேகுரலில் ஒற்றுமையுடன் தமிழர் விடுதலைக் கூட்டணியை உருவாக்கிய அமரர் ஜீ.ஜீ.பொன்னம்பலம், அமரர் தந்தை செல்வநாயகம் ஆகிய இரு தலைவர்களுக்கும் நன்றியாக இருப்பது எமது கடமையாகும்.

அமரர் ஜீ.ஜீ.பொன்னம்பலம் உலகப் புகழ்பெற்ற பெரும் சட்டத்தரணி. அவர் வழக்குகளில் திறமையாக வாதாடி நீதிவான்களையே வியக்கவைத்தவர். அவரின் சாதனைகளைச் சொல்லிக்கொண்டே போகலாம்.

காலத்தின் தேவையைக் கருத்திற்கொண்டு ஒன்றிணைந்த அமரர் ஜீ.ஜீயினதும் தந்தை செல்வாவினதும் கனவு நனவாக அவர்கள் பாதையில் சென்று வெற்றியை அடைய வேண்டும் - என்றார்.

இக்கூட்டத்தில் யாழ்.மாநகரசபை உறுப்பினர்கள் சி.விஜயரத்தினம், வ.சந்திரசேகரம் ஆகியோரும் உரையாற்றினர்.

அமரர் ஜீ.ஜீ.பொன்னம்பலத்தின் திருவுருவப் படத்திற்கு கூட்டணியின் உறுப்பினர்கள் பலரும் மலர்மாலை அணிவித்து அஞ்சலி செலுத்தினர். (க-180-86)

# அமரர் வைரமுத்துவுக்கு பட்டம் வழங்கி பல்கலைக்கழகம் கௌரவிக்க வேண்டும்

## வசந்தகான சபா புனரமைப்பு விழாவில் உரை

வலிகாமம் தெற்கு, பெப்.12

"காலஞ்சென்ற நடிகமணி வி.வி. வைரமுத்து ஓர் உலகப் புகழ்பெற்ற இயல், இசை, நாடக சக்கரவர்த்தி மட்டுமல்ல, நடிப்புப் பல்கலைக்கழகமும் கூட. யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் அவருக்கு கௌரவப்பட்டமாக முதுமாணிப் பட்டம் வழங்கிக் கௌரவிக்கவேண்டும்."

நடிகமணி வி.வி.வைரமுத்துவால் ஸ்தாபிக்கப்பெற்ற காங்கேசன்துறை 'வசந்தகான சபா'வின் புனரமைப்பு விழாவில் உரையாற்றிய வலி.வடக்கு பிரதேச செயலக கலாசார உத்தியோகத்தர் எம்.அருள்சந்திரன் மேற்கண்டவாறு கூறினார்.

இராமநாதன் கல்லூரி வளாகத்தில் இயங்கும் யூனியன் கல்லூரி மண்டபத்தில் எம்.கனகரட்ணம் தலைமையில் இந்த விழா இடம்பெற்றது.

நடிகமணி வைரமுத்துவின் சமகால நடிகர்கள், குடும்பத்தவர்கள், இனத்தவர்கள், அபிமானிகள், கலைஞர்கள் எனப் பெரும்எண்ணிக்கையில் ஒன்றுகூடி சபாவினைப் புனரமைப்புச் செய்துள்ளனர்.

யாழ். பல்கலைக்கழகத்தில் நடிகமணியின் நாடகங்கள் பல, நாடகமும் அரங்கியலும் என்ற நுண்கலை பாடத்தில் இடம்பெற்று வருகின்றன. எனவே அவருக்கு முதுமாணிப் பட்டம் வழங்குவது பொருத்தமுடையது - என்றும் அவர் சொன்னார்.

விழாவுக்குத் தலைமை வகித்த எம். கனகரட்ணம் கூறியதாவது :-

பணத்தினால் நிமிர்ந்துநின்ற நாடகக் கலைஞர்கள் எவரும் இல்லை. வேண்டுமானால் சினிமாத்துறையில் அது இடம்பெறலாம். மேடையில் ஆடிய பெண்களைச் 'சின்னமேளக்காரிகள்' என ஒதுக்கிய காலத்தில் தன் பிள்ளைகள், இனத்தவர்களைத் துணிந்து மேடையேற்றி சாதனை படைத்தவர் வைரமுத்து.

பழைய கலைஞர்கள், வைரமுத்துவின் குடும்பத்தினர், பிள்ளைகளை அரவணைத்து சபா புனரமைப்புச் செய்யப்பட்டுள்ளத் என்றும் அவர் கூறினார்.

இளைப்பாறிய கிராமசேவையாளர் எஸ்.ஆர்.யேசுபாலன், வைரமுத்துவின் மகள் திருமதி ஜெயந்தா தவராசா, கலைஞர் கே.உருத்திராபதி, கலைஞர் சி. புஷ்பராஜா, கலைஞர் செல்வரத்தினம் உட்படப் பலர் உரையாற்றினர்.

'வசந்தகான சபா'வின் புதிய நிர்வாகசபையும், ஆலோசனை சபையும் கூட்டத்தில் தெரிவுசெய்யப்பட்டன. (க-152)

### நாளை

மாசி 01
புதன்கிழமை
(13-02-2002)
திதி : பிரதமை
பிற்பகல் 3.24 வரை.
நட்சத்திரம் : சதயம்
காலை 6.03 வரை.
சுபநேரம் : 5.04 - 6.34
ராகுகாலம் : 12.34 - 2.04
(பழைய நேரப்படி)

### உதயவாக்கு

அறிவின்மையைவிட கவனமின்மை அதிகத் தீங்கு புரிகிறது.

பருத்தித்துறை துறைமுகத்தில்

# பொருள்களை இறக்கும் பணி முழுவீச்சில் நடந்துவருகிறது

யாழ்ப்பாணம்,பெப்.12

கடந்த பத்துத் தினங்களின் பின்னர் பருத்தித்துறைத் துறைமுகத்தில் கப்பல்களில் இருந்து பொருள்களை இறக்கும் பணிகள் முழுவீச்சில் இடம்பெற்றுவருவதாக யாழ்.செயலக வட்டாரங்கள் தெரிவித்தன.

'பொல்கொட' கப்பலில் எடுத்துவரப்பட்ட சீமெந்து 'பக்கெட்'டுக்களை இறக்கும் பணி நேற்றுமுன்தினம் முடிவடைந்துள்ளது.

தற்போது 'ஹெந்தல' கப்பலில் இருந்து ஆயிரத்து 853 மெற்றிக்தொன் கோதுமை மாவையும் -

'வாதுவ' கப்பலில் இருந்து ஆயுர்வேத வைத்தியசாலைகளுக்கான மருந்துப் பொருள்கள் மற்றும் தனியாருக்கான பொருள்கள் ஆகியவற்றை இறக்கும் பணிகள் துரிதமாக நடைபெற்றுவருகின்றன.

இதேவேளை -

'கோமாரி' மற்றும் 'இந்துருவவ' கப்பல்களும் ஒருதொகுதி பொருள்களுடன் அடுத்தவாரம் வரவுள்ளதாகவும் அந்த வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன.

யாழ்.செயலகத்தின்முன்னால் மீனவர்கள் மேற்கொண்டுவந்த மறியற்போராட்டத்துக்கு ஆதரவு தெரிவித்துத் துறைமுகத் தொழிலாளர்களும் பகிஷ்கரிப்பில் ஈடுபட்டு வந்தனர் என்பது தெரிந்ததே. (க-10)

# சமாதான முயற்சிகளை தீவிரப்படுத்த ஆஸ்திரேலியாவில் குழு நியமனம்

## தமிழ், சிங்கள அறிவுஜீவிகள் இணைந்து ஏற்பாடு

வடக்கு - கிழக்கில் முன்னெடுக்கப்படும் சமாதான முயற்சிகளைத் தீவிரப்படுத்துவதற்காக ஆஸ்திரேலியாவில் மெல்போர்ன் நகரில் அறிஞர் குழுவொன்று உருவாக்கப்பட்டுள்ளது.

தமிழ், சிங்கள அறிவுஜீவிகள் இணைந்து இக்குழுவை ஏற்படுத்தியுள்ளதாகவும் இலங்கை அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையிலான சமாதான நடவடிக்கைகளில் இந்தக் குழுவினர் ஒத்துழைப்பையும் ஆதரவையும் வழங்குவர் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மெல்போர்ன் நகரில் சமாதான முயற்சிகளுக்கு ஆதரவான பிரசாரங்களை அங்குள்ள ஊடகங்களின் உதவியுடன் இக்குழுவினர் ஆரம்பித்திருக்கின்றனர் என்றும், அனைத்து நாடுகளின் இராஜதந்திரிகளுடன் தொடர்புகொண்டு இம்முயற்சிகள் குறித்து அறிவிப்பதன்மூலம் சர்வதேச நாடுகளின் ஆதரவைத் தூண்டும் நடவடிக்கையில் இவர்கள் ஈடுபட்டுவருகின்றனர் என்றும் தெரிவிக்கப்படுகிறது. (க 8)





**டேவிட் பீரிஸ் மோட்டார் கம்பனியிடமிருந்து** ஒரு பஜாஜ் மோட்டார் சைக்கிளை நீங்கள் வாங்குவீர்களானால் நீங்கள் நாடும் தரச்சிறப்பு, அபாரமான செயற்பாடு, நம்பகத்தன்மை அனைத்தும் நிறைவேறுகின்றது. நீங்கள் தனிப்பட்ட அல்லது குடும்ப வாழ்க்கைப் பாவனைக்கு கச்சிதமாக அமையும் பலதரப்பட்ட, நிகரில்லாத, உறுதிமிக்க, பன்முகப் பாவனைக்குரிய பஜாஜ் மோட்டார் சைக்கிள்கள் வகை வகையாக எம்மிடம் உண்டு.

நீங்கள் நாடுவது வேகமா, சிக்கனமா, அல்லது தன்னிகரில்லா தனிச்சிறப்பா? அது எது வேண்டுமானாலும் DPMC வழங்கும் வகையறாக்களில் நீங்கள் பூரண நம்பிக்கை வைக்கலாம். அத்துடன் கீழ் காணப்படும் வியாபாரிகளிடம் நீங்கள் எமது அனைத்துவகை பஜாஜ் மோட்டார் சைக்கிள்களையும் பெற்றுக்கொள்ளலாம்.

**பஜாஜ்** பல்லாண்டுகாலம் பணத்திற்கேற்ற பெறுமதி.

DPMC **டேவிட் பீரிஸ் மோட்டார் கம்பனி லிமிட்டட்.**

75, ஹைட் பார்க் கோர்னர், கொழும்பு - 2. தொலைபேசி : 074-700600 பெக்ஸ் : 687175 ஹொட்லைன் : 074-715050

**விசாரணைகள்** எஸ். யசோதரன், 67-16, ஸ்டான்லி வீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி : 021-2798
எம்.பி.சி.எஸ் யாழ்ப்பாணம், இல.127, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி : 021-2587
குறிஞ்சி டிரேடர்ஸ், இல. 6, 1ம் மாடி மொடன் மாக்கட் கண்டி வீதி, சாவகச்சேரி. தொலைபேசி : 021-2221

Mel Ads

உள்ளூராட்சித் தேர்தல்

# வேட்புமனுக்கள் பல நிராகரிப்பு; சட்ட நடவடிக்கை எடுக்க முடிவு

## கட்சிகள் தயாராகி வருகின்றன

கொழும்பு,பெப்.12

உள்ளூராட்சித் தேர்தல் வேட்புமனுக்கள் நிராகரிக்கப்பட்டமைக்கு எதிராக சட்டநடவடிக்கை எடுக்க அரசியல் கட்சிகளும், சுயேச்சைக் குழுக்களும் தயாராகி வருகின்றன.

ஐக்கிய தேசிய முன்னணி, பொது மக்கள் ஐக்கிய முன்னணி மற்றும் பல சுயேச்சைக் குழுக்களின் வேட்புமனுக்களை உதவித் தேர்தல் ஆணையாளர்கள் நிராகரித்திருந்தனர்.

வேட்புமனுக்கள் நிராகரிக்கப்பட்டமை தவறானது - அந்த வேட்புமனுக்களை மீள ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று வலியுறுத்தியே கட்சிகள் நீதிமன்றத்தில் மனுக்களைத் தாக்கல் செய்யத் தயாராகி வருகின்றன.

இளம் வயதினருக்கு தேர்தலில் இடமளிக்கவேண்டும் என்று அரச தரப்பில் நிபந்தனை விதிக்கப்பட்டிருந்தது. இந்த நிபந்தனைக்கு ஏற்ற வகையில் வேட்புமனுக்கள் தாக்கல் செய்யப்படாமையே வேட்புமனுக்கள் பல நிராகரிக்கப்பட்டதற்குக் காரணம எனக் கூறப்பட்டது.

(க-3)

## 31ஆவது நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



| தோற்றம் | மறைவு |
|---|---|
| 18 - 04 - 1935 | 13 - 01 - 2002 |

### திருமதி கந்தையா மகேஸ்வரி

*(தேநீர்க்கடை, பஸ் நிலையம் - சாவகச்சேரி)*

**அன்புக்கும் பண்புக்கும் இலக்கணமானவரே!**
**ஆருயிராய் விளங்கிய அன்புத் தாயே!**
**நீங்கள் மறைந்தாலும் நினைவுகள் மறையாது!**
**ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்!**

எமது அன்பு அன்னையின் மறைவுச் செய்திகேட்டு எங்கள் இல்லம் நாடிவந்து, எமக்கு அனுதாபம் தெரிவித்து, துயரத்தில் பங்குகொண்ட அனைத்து அன்புள்ளங்களுக்கும் எமது நெஞ்சம் நெகிழ்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

பிரிவால் துயருறும்:
**மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.**

நிரந்தர முகவரி:
*பெருங்குளம் பிள்ளையார் கோயிலடி, சாவகச்சேரி.*

தற்காலிக முகவரி:
*இல.92, பழம் வீதி, கந்தர்மடம்.* (638)

## முதலாவது வருட நினைவஞ்சலி



| தோற்றம் | மறைவு |
|---|---|
| 29 - 01 - 1921 | 25 - 01 - 2001 |

### அமரர் முருகேசு மாணிக்கவாசகன்

*(வேலணை மேற்கு, வேலணை)*

**திதி: 12.02.2002 செவ்வாய்க்கிழமை**

**சீர்பெற சிறப்பு மலர விண்ணுயர கடமையுணர்**
**மாண்புறு அப்பாவே!**
**எமைவிட்டுப் போனீரோ? இல்லை! இல்லை!!**
**எங்குமே நினைவு தொடர் சீராளர்**
**கண்ணீரும் வளர நினைவு செறிய நன்மைகள் வீழ்வதா?**
**இல்லை! இல்லை!! குடும்பமே மனத்துயருடன் சுழல**
**முடிவு முடிவு வரமுடியா ஒன்று சிந்தனை சுழல**
**பாசங்கள் மிளிர இல்லாமை சுழல முடியாதே!**

*வட்டுக்கோட்டை.*

**மனைவி, பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.** (607)

## நிரந்தர நியமனம்

வலி.தென்மேற்கு,பெப்.12

யாழ்.மாவட்ட தபாலகங்களில் கடந்த ஐந்து வருடங்களுக்கு மேலாகப் பதில் உப அதிபர்களாகக் கடமையாற்றிவந்த 90பேரில் 40 பேருக்கு நிரந்தர நியமனம் வழங்கப்பட்டுள்ளது. (க-185)

## ரயில் பாதை திருத்தம்

செங்கலடி,பெப்.12

வெலிகந்தை - வாழைச்சேனை ரயில் பாதை திருத்தவேலைகள் துரிதப்படுத்தப்பட்டுள்ளன. இப்பணியில் 140 ஊழியர்கள் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

ஓட்டமாவடியில் ரயில் பாதைக்கு அருகில் சட்டவிரோதமாகக் கட்டப்பட்டிருந்த 40 கடைகளும் 18 வீடுகளும பொலீஸாரின் உதவியுடன் ரயில்வே ஊழியர்களினால் தகர்த்தெறியப்பட்டன. (ஐ)

## தபால்மூல வாக்களிப்பு மார்ச் 13, 14இல்

கொழும்பு,பெப்.12

உள்ளூராட்சி சபைத் தேர்தலின் தபால்மூல வாக்களிப்பு மார்ச் மாதம் 13ஆம், 14ஆம் திகதிகளில் நடைபெறும் என தேர்தல் ஆணையாளர் தயானந்த திஸாநாயக்க அறிவித்துள்ளார்.

உள்ளூராட்சிச் சபைகளுடன் தொடர்புடைய திணைக்களங்களுக்கு வாக்குச்சீட்டுக்கள் மார்ச் மாதம் முதல் வாரத்தில் அனுப்பிவைக்கப்படவுள்ளன.

இதேவேளை -

வாக்காளர் அட்டைகள் மார்ச் 4 ஆம் திகதி தபாலகங்களுக்கு ஒப்படைக்கப்பட்டு வாக்காளர்களுக்கு விநியோகிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

வடக்கு - கிழக்கு மாகாணத்தில் உள்ளூராட்சித் தேர்தல்கள் ஒத்திவைக்கப்படலாம் என எதிர்பார்க்கப்பட்டபோதிலும் மாவட்டத் தேர்தல் அலுவலகங்கள் மார்ச் மாதம் 25ஆம் திகதி தேர்தலை எதிர் கொள்ளத் தயாராகவே செயற்படுகின்றன.

(ஐ-8)

## அடுத்த மாத நடுப்பகுதியில் திருப்பாடுகளின் காட்சி

யாழ்ப்பாணம்,பெப்.12

யாழ்.திருமறைக் கலாமன்றம் தவக் காலத்தை முன்னிட்டு ஒவ்வொரு வருடமும் மேடையேற்றும் பிரமாண்டமான பக்திப் படைப்பாகிய 'திருப்பாடுகளின் காட்சி' அடுத்த மாத நடுப்பகுதியில் ஆறு தினங்கள் மேடையேற்றப்படவுள்ளது.

'கல்வாரி யாகம்' என்னும் பெயரில் மேடையேற்றப்படும் இப்படைப்பு எதிர்வரும் மார்ச் மாதம் 16ஆம் திகதி இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரி மைதானத்திலும் பின்னர் 18, 19, 21, 22, 23 ஆகிய திகதிகளில் யாழ்.திருமறைக் கலாமன்ற திறந்த வெளியரங்கிலும் மேடையேற்றப்படவுள்ளது.

இம்முறை இப்படைப்பில் இரு நூறுக்கும் மேற்பட்ட திருமறைக் கலாமன்றத்தின் கலைஞர்கள் பங்கேற்கவுள்ளனர்.

மக்களின் நன்மைகருதி வழமையாக நான்கு தினங்கள் நடைபெறும் இத்திருப்பாடுகளின் காட்சி இவ்வருடத்தில் மேலும் இரு தினங்கள் அதிகரிக்கப்பட்டுள்ளதாக மன்ற வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

(க-8)

## பதுளை மாவட்டத்தில் தொழிலாளருக்கு வீடுகள்

பண்டாரவளை,பெப்.12

அரசின் நூறுநாள் வேலைத் திட்டத்தின்கீழ் தோட்டத் தொழிலாளர்களுக்கு பதுளை மாவட்டத்தில் 285 வீடுகள் கட்டப்படும். வீடமைப்பு, தோட்ட உட்கட்டமைப்பு அமைச்சர் ஆறுமுகம் தொண்டமான் இதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளார்.

பண்டாரவளை தொகுதியில் கோரைமுட்டாவ, நாயபெத்த, வியங்காவல ஆகிய தோட்டங்களிலும், அப்புத்தளை தொகுதியில் பிளக்வூட், கல்கந்த, அப்புத்தளை ஆகிய தோட்டங்களிலும் ஹாலிஎல தொகுதியில் திக்வெல்ல, குயின்ஸ்டவுண் ஆகிய தோட்டங்களிலும் பசறைத் தொகுதியில் ஏல்டெப், போகத்தை ஆகிய தோட்டங்களிலும் பதுளைத் தொகுதியில் தெல்பெத்த, கெந்தகொல்ல, தலகல ஆகிய தோட்டங்களிலும் இவ்வீடுகள் அமைக்கப்படும். (ஐ)

# பிரிட்டிஷ், பிரான்ஸ் தூதர்களுடன் ஈ.பி.டி.பி. குழுவினர் சந்திப்பு

யாழ்ப்பாணம்,பெப்.12

தற்போது மேற்கொள்ளப்பட்டு வரும் சமாதான முயற்சிகள் குறித்து ஈ.பி.டி.பியின் செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா தலைமையிலான குழுவினர் கடந்த வெள்ளிகிழமை இலங்கைக்கான பிரிட்டிஷ் தூதுவர் லின்டா டபல்ட் அம்மையார், பிரான்ஸ் தூதுவர் மேரி பிரான்ஸ் பேனியர் ஆகியோரைச் சந்தித்துப் பேச்சு நடத்தினார்.

இந்தப் பேச்சுக்களின்போது, அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் கைச்சாத்திடப்படவுள்ள புரிந்துணர்வு உடன்படிக்கையில் ஆள்கடத்தல்கள், அரசியல் கொலைகள் மற்றும் மிரட்டல்கள் ஆகியவற்றைத் தடுப்பது குறித்த விவரங்களும் -

சிறுவர்களை படைக்கு ஆள்சேர்க்கும் நடவடிக்கைகளை நிறுத்துதல், முறையற்ற பணவசூலிப்புகளைத் தடுத்தல் முதலிய விடயங்களும் இடம்பெறவேண்டும் என ஈ.பி.டி.பி. குழுவினர் வலியுறுத்தியதாக அந்த அமைப்பு விடுத்த செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்தச் செய்திக் குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

வடக்கு - கிழக்கு மாகாணத்துக்கென ஓர் இடைக்கால நிர்வாகம் ஏற்படுத்தப்படுமாயின் அங்கு மாற்றுக் கருத்துக்களுக்கு இடமளிக்கும் ஏற்பாடுகளும், ஜனநாயகத் தன்மையும் நிலவவேண்டியது அவசியம் ஆகும் என்றும் -

கடந்த பொதுத் தேர்தலின்போது தமிழ்க்கட்சிக் கூட்டமைப்பு சார்பாக இடம்பெற்ற தேர்தல் முறைகேடுகள், வாக்குப் பெட்டிகள் நிரப்பப்பட்டமை, கள்ளவாக்குகள் போடப்பட்டமை குறித்தும் தூதுவர்களுக்கு எடுத்துக் கூறப்பட்டது.

எமது கட்சியின் சார்பாக முன்வைக்கப்பட்ட கருத்துகளுக்கு உன்னிப்பாகச் செவிசாய்த்த தூதுவர்கள் எதிர்காலத்தில் தமது நாடுகள் மேற்கொள்ளும் நடவடிக்கைகளின்போது இவை கவனத்திற்கொள்ளப்பட நடவடிக்கை எடுப்பதாகத் தெரிவித்துள்ளனர்.

மேலும் - பல்வேறு வெளிநாட்டு தூதுவர்களுக்கும் தமிழ் பேசும் மக்களின் நிலைமை தொடர்பாக எடுத்துரைக்கும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. இந்தச் சந்திப்பில் செயலாளர் நாயகம் கே.என்.டக்ளஸ் தேவானந்தாவுடன் கலாநிதி எஸ்.விக்னேஸ்வரன், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.தவராஜா ஆகியோரும் பங்குபற்றியிருந்தனர் - என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

(க-7)

## மூன்றாம் ஆண்டு நினைவலைகள்



| தாயின் மடியில் | ஆண்டவன் திருவடியில் |
|---|---|
| 10 - 04 - 1940 | 18 - 01 - 1999 |

### அமரர் Dr.நடராசா சுந்தரலிங்கம்

திதி: 12.02.2002 பிரதமை

வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்து வழிகாட்டி - எம்மை
வாழ வைத்த தெய்வமே - எங்கள்
இதயக் கோயிலில் என்றென்றும் - உங்கள்
நினைவுத் தீபத்தை ஏற்றி வைப்போம்.
உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனை வேண்டுகின்றோம்.

*புகையிரத வீதி, மாவிட்டபுரம்.* தாய், மனைவி, பிள்ளைகள். (608)

## கண்ணீர் அஞ்சலி

### க.சி.நமசிவாயம்

*(ஓய்வுபெற்ற நில அளவையாளர்)*

சென்.ஜோன் அம்புலன்ஸ் படைப்பிரிவின் பிரிவு அத்தியட்சகரும், யா/கோண்டாவில் இராமகிருஷ்ண மகாவித்தியாலய ஆசிரியருமாகிய

***செல்வி ந.பிரமிளா*** அவர்களின் அன்புத் தந்தையார்

**க.சி.நமசிவாயம்**

அவர்கள் கடந்த 08. 02. 2002இல் காலமாகியதையிட்டு துயருறும் அவரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன், அன்னாரின் ஆத்மா சாந்திபெறவும் இறைவனை வேண்டுகிறோம்.

*யாழ்.தெற்கு பிரதேசம்,*
*தலைமைக் காரியாலயம்,*
*புகையிரத வீதி, கொக்குவில்.*

**மாவட்ட ஆணையாளர், உத்தியோகத்தர், அங்கத்தவர், சென்.ஜோன் அம்புலன்ஸ்.** (636)

## மரண அறிவித்தல்

### முருகேசு நடராசா (வாத்தியார்)

*(கொக்குவில் மேற்கு, கேணியடி)*

06.02.2002 சிவபதமடைந்த "வாத்தியார் ஐயா" மு.நடராசா ஆசிரியரின் இறுதிக்கிரியைகள் நாளை (13.02.2002) புதன்கிழமை 10 மணிக்கு அன்னாரது இல்லத்தில் நடைபெறும் என்பதை அறியத்தருகின்றோம்.

அமரர் அவர்கள் ஸ்ரீஞானபண்டித வித்தியாலய முன்னாள் ஆசிரியை சிவக்கொழுந்துவின் கணவரும் திருமதி த.புனிதவதி (முன்னாள் தபாலதிபர்), ந.புண்ணியமூர்த்தி (கனடா) ஆகியோரின் அன்புத் தந்தையாரும் முன்னாள் பேராசிரியர் டாக்டர் தனஞ்சயராசசிங்கம், ஸ்ரீசாலினி (கனடா) ஆகியோரின் மாமனாரும் கனடாவில் வசிப்பவர்களான ஸ்ரீசிவானந்தன், ஸ்ரீபெருந்தவச்செல்வி, ஸ்ரீகுகானந்தன், ஸ்ரீமயூரானந்தசெல்வி, தனஞ்செயன், தனஞ்செயராசசிங்கம் (லண்டன்) ஆகியோரினதும் ஜெனிபர், மனோகரி, கிருஷ்ணகுமார், சதீஸ் ஆகியோரினதும் பேரனாரும் ஜஸ்ரின், ஜஸீகா, விமேஸ், அனேஸ், கீர்த்திகா, அஞ்சனா ஆகியோரின் பாசமிகு பூட்டனாரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக கோம்பையன்மணல் மயானத்துக்கு 11 மணிக்கு எடுத்துச்செல்லப்படும்.

அனைவரும் இந்த அறிவித்தலை ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
ந.புண்ணியமூர்த்தி (நடராசா - மகன்)
த.புனிதவதி (மகள்)
செல்வன் த.தனஞ்செயன் (பேரன்)

*கேணியடி, கொக்குவில்.* (614)

# சின்னஞ்சிறு விளம்பரம்

## விற்பனைக்கு

கலர் மீன்கள், மீன் தொட்டிக் குரிய மோட்டர்கள், வெள்ளைக் கற்கள் என்பன விற்பனைக்கு உண்டு. தொடர்பு: 40/17, சீனியர் லேன், யாழ்ப்பாணம். (நண்பகல் 12 மணிக்குப் பின் தொடர்புகொள்ளவும்) (639)

நல்ல நிலையில் உள்ள வீடியோ புறொஜெக்ரர் விற்பனைக்கு உண்டு. உயர்கல்வி நிறுவனங்கள், மினி சினிமாக்களுக்கு ஏற்றது. தொடர்பு: சு.விக்னேஷ், 100, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம். (C-20693)

## வகுப்புகள்

கணிதத்தில் சிறந்த பெறுபேறு அடைய வேண்டுமா? கணிதம் கற்பிப்பதில் 40 வருடங்களுக்கு மேல் அனுபவம் வாய்ந்த ஆசிரியரினால் மிகக்குறுகிய காலத்தில் சிறந்த பெறுபேறுகளுக்கு உத்தரவாதம் அளிக்கப்பட்டு, அடிப்படை அறிவிலிருந்து கற்பிக்கப்படும். O/L, 10, 9, 8,7,6. இல.8, பிளர்ச்சஸ் ஒழுங்கை, சுண்டுக்குளி (மாணவர் வசதிக்கேற்ப நேரம் ஒதுக்கப்படும்).. (C-20657)

## வீடற்றவன்

அராலியூர் ந.சுந்தரம்பிள்ளை எழுதிய "வீடற்றவன்" நாவலின் விளக்கமும் விமர்சனமும் நூலைப் படித்தால், வீடற்றவனில் எந்த வினா கேட்டாலும் பதில் எழுதலாம். ரூபா 25/-. (634)

## தவறிவிட்டது

எழுதுமட்டுவாழ் தெற்கைச் சேர்ந்த நடராசா கலக்சனாவின் விசேட அ. அட்டை (இல.091034528) தட்டாதெரு சந்திக்கும் யாழ்.பஸ் நிலையத்திற்கும் இடையில் பஸ்ஸில் போகும் போது தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் சூரியகுமார், கலைநகர், அளவெட்டிதெற்கு, அளவெட்டி என்ற முகவரியில் ஒப்படைத்துதவவும். (641)

## விற்பனைக்கு

நல்லினப் பன்றிகள் விற்பனைக்கு உண்டு.
தொடர்புகொள்ளவும்.
**அண்ணா பாம்**
ஸ்ரேசன் றோட்,
இணுவில். (C/20695)

## சனசமூக நிலையங்கள் முன்பள்ளிகளின் விவரம் சேகரிப்பு!

யாழ்ப்பாணம்,பெப்.12

சாவகச்சேரி பிரதேச செயலர் பிரிவில் தற்போது மீளச் செயற்பட்டு வரும் சனசமூக நிலையங்கள் மற்றும் முன்பள்ளிகள் தொடர்பான பூரண விவரங்கள் அப்பகுதி சனசமூக அபிவிருத்தி உத்தியோகத்தரால் திரட்டப்பட்டு வருகின்றன.

எனவே, மீளவும் செயற்பட்டுவரும சனசமூக நிலையங்கள், முன்பள்ளிகளின் நிர்வாகிகள், இடம்பெயராது தொடர்ந்தும் செயற்பட்டுவரும் சனசமூக நிலையங்கள் மற்றும் முன்பள்ளிகளின் நிர்வாகிகள் தமது விவரங்களை சனசமூக அபிவிருத்தி உத்தியோகத்தரிடம் வழங்குமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. (க-10)

## கலந்துரையாடல்

யாழ்ப்பாணம்,பெப்.12

யாழ்.தொழில்நுட்பக் கல்லூரிக்கு புதிய கல்வியாண்டின் கற்கை நெறிக்கு விண்ணப்பித்து, அனுமதி மறுக்கப்பட்ட மாணவர்களுக்கான கலந்துரையாடல் நாளை புதன் கிழமை காலை 9 மணிக்கு தொழில்நுட்பக் கல்லூரி முன்றிலில் இடம்பெறவுள்ளது.

அனுமதி மறுக்கப்பட்ட சகல மாணவர்களையும் இக் கலந்துரையாடலில் கலந்துகொள்ளுமாறு மாணவர் ஒன்றியம் கேட்டுள்ளது.(க-10)

## மைதானத்துக்கு காணி கொள்வனவு

சுன்னாகம்,பெப்.12

- சுன்னாகம் திருஞானசம்பந்தா வித்தியாசாலையின் விளையாட்டு மைதானத்துக்கென புதிதாகக் காணி கொள்வனவு செய்யப்பட்டுள்ளது.

நாலரை லட்ச ரூபா செலவில் வெளிநாட்டிலும், உள்நாட்டிலும் உள்ள பழைய மாணவர்கள் மற்றும் நலன் விரும்பிகள் அளித்த நிதியின் மூலம் மேற்படி காணி பெறப்பட்டுள்ளது.

விளையாட்டு மைதானத்தைப் புனரமைப்பதற்கான குழு ஒன்றும் உருவாக்கப்பட்டுள்ளது. (க-27)

## ஒரு மின்குமிழை அணைத்து

# பாவனையாளர் ஒத்துழைத்தால் மின்வெட்டைத் தவிர்க்கலாம்

### அதிகாரி கூறும் ஆலோசனை

மின்சார சபையின் ஜெனரேட்டர்களுக்குத் தேவையான ஓட்டோ டீசல் 2 லட்சத்து 54 ஆயிரம் லீற்றர் கடந்த வெள்ளிக்கிழமை கொழும்பில் இருந்து கப்பல்மூலம் வந்து சேர்ந்துள்ளது.

இதனால் கடந்த சனிக்கிழமை தொடக்கம் பகல்நேர மின்வெட்டு நிறுத்தப்பட்டுள்ளது. இது ஒரு தற்காலிக ஏற்பாடு மட்டுமே.

- இவ்வாறு தெரிவித்தார் மின்சார சபையின் உயர் அதிகாரி ஒருவர்.

தற்போது வந்துள்ள எரிபொருள் 5 நாள்களுக்கே போதுமானது. இவ்வாரம் மேலும் ஒரு கப்பல் எரிபொருளுடன் வந்துசேரும் என எதிர்பார்க்கப்படுவதாக என்னிடம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அப்படியே எரிபொருள் கப்பல் வந்து சேர்ந்துவிட்டால், மின்வெட்டைத் தவிர்க்கக்கூடியதாக இருக்கும் என்றும் அவர் சொன்னார்.

இதேசமயம், தற்போது காலை 5.30 மணி தொடக்கம் 6.45 மணி வரையும் மாலை 6.45 மணி தொடக்கம் இரவு 8.15 மணி வரையிலான சுழற்சிமுறை (ஒன்றுவிட்ட ஒருநாள்) மின்வெட்டு நடைமுறையில் இருந்து வருகிறது. யாழ்மாவட்டத்தில் உள்ள 40 ஆயிரம் மின்பாவனையாளர்களும் ஒத்துழைத்தால், இந்த மின்வெட்டை இல்லாமற்செய்யமுடியும்.

குறிப்பிட்ட இந்த நேரத்தில் ஒவ்வொரு பாவனையாளரும் ஒரு மின் விளக்கை அணைப்பதன் மூலம் 1.6 மெகா வோட்ஸ் மின்சாரத்தைச் சேமிக்கமுடியும்.

இவ்வாறாக 40 ஆயிரம் பாவனையாளர்களும் எம்முடன் ஒத்துழைத்தால், இந்த சுழற்சிமுறை மின் வெட்டை தவிர்க்கமுடியும் - என்றும் அந்த அதிகாரி தெளிவுபடுத்தினார்.(க-180)

## செயலகத்தில் அமைச்சு அலுவலகம் வெள்ளியன்று திறப்பு

யாழ். செயலகத்தில் அமைக்கப்பட்டுள்ள இந்து கலாசார அமைச்சின உப அலுவலகம் எதிர்வரும் 15 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கும் 10.15 மணிக்கும் இடையிலான சுபவேளையில் சம்பிரதாய பூர்வமாகத் திறந்து வைக்கப்படவுள்ளது.

இந்நிகழ்வில் இந்து கலாசார அமைச்சர் தி. மகேஸ்வரன் உட்பட யாழ். அரச அதிபர், மேலதிக அரச அதிபர் மற்றும் திணைக்களத் தலைவர்கள், செயலக ஊழியர்கள், ஐ.தே. கட்சி ஆதரவாளர்கள் எனப் பலரும் கலந்துகொள்ளவுள்ளனர். (க-10)

## இடம்மாற்றம்

நவாலியில் இயங்கிய
**Dr.சிவனடியானின் வைத்தியசாலை,**
*ஆனைக்கோட்டை மூத்த விநாயகர் கோயிலடிக்கு*
இடம்மாற்றப்பட்டுள்ளது என்பதை சகலருக்கும் அறியத்தருகின்றேன்.
- *நிர்வாகி.*
(649)

## வணிகர் கழகம், கைதடி
## அங்கத்தவர்களின் கவனத்துக்கு

புனர்வாழ்வு அமைச்சால் வழங்கப்பட்ட காசோலை இதுவரை பெறாதவர்களும், வங்கிக்கடனுக்கு விண்ணப்பித்தவர்களும் எதிர்வரும் 16-02-2002 ஆம் திகதி சனிக்கிழமைக்கு முன் சங்கத் தலைமைக் காரியாலயத்துடன் தொடர்புகொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

க.பரமேஸ்வரன்
செயலாளர்.
(554)

## கண்ணீர் அஞ்சலி

தோற்றம் 13 - 03 - 1943



மறைவு 10 - 02 - 2002

எமது சங்கத்தின் லொறிச்சாரதி

### அமரர் சே.விவேகானந்தன்

அவர்களின் திடீர் மறைவையிட்டு நாம் மிகுந்த வேதனை அடைகிறோம். அன்னாரின் பிரிவால் துயருறும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்து, அவரது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

*வலி.கிழக்கு (தெ.ப.)ப.நோ.கூ.சங்கம், நீர்வேலி.* (C-20696)
தலைவர், பணிப்பாளர்கள், பணியாளர்கள்.

## கண்ணீர் அஞ்சலி

யாழ்.போதனா வைத்தியசாலையில் தாதிய உத்தியோகத்தராகக் கடமையாற்றும் **செல்வி பரமேஸ்வரி சிங்காரவடிவேல்** அவர்களின் அன்புத் தாயார்

### திருமதி சிவக்கொழுந்து சிங்காரவடிவேல்

அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தினைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.
ஆத்மா சாந்தியடைவதாக!

தாதிய உத்தியோகத்தர் நலன்புரிச் சங்கம்,
யாழ்.போதனா வைத்தியசாலை.
(648)



## பாராட்டி வாழ்த்துகின்றோம்

மல்லாகம் சாளம்பை முருகமூர்த்தி தேவஸ்தான அறங்காவலர் சபைத் தலைவரும், சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரியின் இளைப்பாறிய இணை பிரதி அதிபருமாகிய


**இளையதம்பி ஆனந்தன் (J.P.) அவர்கள்**

சமாதான நீதிவானாக நியமிக்கப்பட்டதையிட்டு அவரைப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

*கோட்டைக்காடு, மல்லாகம்.* (645)
வே.ஜெயக்கொடி குடும்பம்,
வே.லோகராஜா குடும்பம்,
வே.நகுலேஸ்வரன் குடும்பம்.

## முதலாம் வருட நினைவஞ்சலி

மலர்வு 05 - 07 - 1933



உதிர்வு 12 - 02 - 2001

### அமரர் சம்புநாதன் சுப்பிரமணியம் பத்தர்

அன்போடு எமை வளர்த்து ஆளாக்கினீர்
இன்று எமைத் தவிக்கவிட்டுப் போனீரோ?
பண்போடு வாழ்ந்த நாள்கள் மறக்கமுடியாதவை!
*ஆத்மா சாந்தியடைவதாக.*

*99, வைத்தீஸ்வரா வீதி, கொட்டடி, யாழ்ப்பாணம்.* (555)
பிரிவால் துயருறும்
சு.ஈஸ்வரன் குடும்பத்தினர் (மகன்)

## கண்ணீர் அஞ்சலி

யாழ். மண்டைதீவு ம.வி. பிரதி அதிபர்
திரு.சு.கனகரத்தினத்தின் அன்பு மாமனார்

### ஆறுமுகம் சிவசம்பு

அவர்களின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த துயரத்தையும் அனுதாபங்களையும் தெரிவித்துக்கொள்கிறோம்.

**மண்டைதீவு ம.வி., மண்டைதீவு.** (556)
அதிபர், ஆசிரியர்கள், பாடசாலைச் சமூகம்.

# மரண அறிவித்தல்கள்

## பொன்னுத்துரை நனோராஜன்

அரியாலையைப் பிறப்பிடமாகவும் கனடாவை வசிப்பிடமாகவும் கொண்ட பொன்னுத்துரை நனோராஜன் அவர்கள் 08.02.2002 வெள்ளிக் கிழமை கனடாவில் அகால மரணமானார்.

அன்னார் காலஞ்சென்ற தோழர் பொன்னுத்துரை மற்றும் குணவதி தம்பதியினரின் அன்பு மகனும் கமலாதேவியின் அன்புக் கணவரும் கண்ணன், சுஜா, டினேஸ் ஆகியோரின் பாசமிகு தந்தையாரும் மனோகரன் (பிரான்ஸ்), சந்திரன், சாரதாதேவி (பிரான்ஸ்), றஞ்சனாதேவி, தர்மேந்திரன் (பிரான்ஸ்), சரோஜாதேவி (கொழும்பு), ஸ்ரீகாந்தன் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புச் சகோதரனும் தனலெட்சுமி (இந்தியா), திலகபாலா (பிரான்ஸ்), அன்ரனி, அநுராதா (பிரான்ஸ்), திருஞானம் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு மைத்துனரும் பூபாலசிங்கம் - மனோன்மணி தம்பதியினரின் அன்பு மருமகனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (11.02.2002) திங்கட்கிழமை கனடாவில் நடைபெற்றன.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
*243/1, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.* (553)
திருமதி அன்ரனி றஞ்சனாதேவி (அக்கா)

## செல்லையா இராசரத்தினம்

மருதடிலேன், சாவகச்சேரி வடக்கைச் (சோலை அம்மன் கோயிலடி) சேர்ந்த செல்லையா இராசரத்தினம் 09.02.2002 சனிக்கிழமை இரவு காலமானார்.

அன்னார் தங்கம்மாவின் அன்புக் கணவரும் பாலகுமார், மஞ்சுளாதேவி (ஆசிரியை, மீசாலை வீரசிங்கம் ம.வி.), இராசேந்திரம், பாலகிருஷ்ணன் (சுவிஸ்) ஆகியோரின் அன்புத் தந்தையும் இந்திராதேவி, மகேசன் (ஆசிரியர், கச்சாய் அ.த.க.வித்.), குமுதநாயகி ஆகியோரின் அன்பு மாமனாரும், தனுஷன், குஷானி, சாரங்கா, சஞ்சிகன் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்றுமுன்தினம் (10.02.2002) ஞாயிற்றுக்கிழமை அன்று நடைபெற்றன.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
*மருதடி லேன், சாவகச்சேரி வடக்கு, மீசாலை.* (551)
பாலகுமார், இராசேந்திரம் (மகன்மார்)
மகேசன் (மருமகன்)

## பறுநாந்து அமிர்தநாதர் (தலைவர்)

நெடுந்தீவு 10ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் தும்பளை, பருத்தித்துறையை வதிவிடமாகவும் கொண்ட பறுநாந்து அமிர்தநாதர் (10.02.2002) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற பறுநாந்து - திரேசம்மாவின் அருமை மகனும் காலஞ்சென்ற அருள்தாஸ் - லங்கேஸ்வரியின் மருமகனும் திருச்செல்வம் - பிலோமினாவின் பெறாமகனும் அருள்மொழியின் அன்புக் கணவரும் அமிர்தராஜ் (ஹாட்லிக் கல்லூரி), அஸ்வினி, அமல்ராஜ் (சிவப்பிரகாச வித்தியாலயம்) ஆகியோரின் பாசமிகு தந்தையும் ஜெயராணி, சறோஜா, மேரி மன்ரேசா (ஆசிரியர், வேம்படி மகளிர் பாடசாலை), ஞானச்சந்திரன் (கனடா) ஆகியோரின் சகோதரரும் தேவதாஸன் (பிரான்ஸ்), ஜோசப்பின் (ஆஸ்திரேலியா), செல்வன் (இந்தியா) ஆகியோரின் உடன்பிறவாச் சகோதரரும் மரியசீலன், கிறிஸ்ரோவ், செல்வமலர் (பிரான்ஸ்), மதுரநாயகம் (ஆஸ்திரேலியா), தேன்மொழி (இந்தியா), உதயன், லங்கேஸ், அருந்ததி, அமுதா, அனுஷியா ஆகியோரின் மைத்துனரும் ஜோட்ஸ் (ஆசிரியர், சைவப்பிரகாச வித்தியாலயம்), டல்சி, ரனிஸ், நெல்சி, ஜென்சி, பரி, டினேஸ், ரோயஸ், டிலோ, மெலோ, நிலோ ஆகியோரின் மாமனாரும் செல்வினின் பெரியப்பாவும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்கம் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
*10ஆம் வட்டாரம், நெடுந்தீவு மத்தி, நெடுந்தீவு.* (643)
அருள்மொழி (மனைவி)

# பெரும் துயரங்கள், இழப்புகளின் மத்தியிலும் யாழ்.மாணவர் கல்வியைக் கைவிடவில்லை

## பிரதி ஆணையாளர் பாராட்டு

யாழ்ப்பாணம்,பெப்.12

எத்தனையோ துன்பங்கள், இழப்புகளை எதிர்கொள்ளநேரிட்டபோதும், குடாநாட்டு மாணவர்கள் தமது கல்விப் பாரம்பரியத்தைக் கைவிடவில்லை. இனிமேலும் அதனைக் கைவிட்டுவிடாதீர்கள்.

இவ்வாறு வேண்டுகோள் விடுத்தார் கல்வி வெளியீட்டுத் திணைக்கள பிரதி ஆணையாளர் ஹுச்சி முஹமட். நேற்றுமுன்தினம் யாழ்.மத்திய கல்லூரியில் இடம்பெற்ற பத்திரிகையாளர்களுடனான சந்திப்பின்போதே அவர் இவ்வாறு அறிவுறுத்தினார்.

பிரதி ஆணையாளர் மேலும் தெரிவித்ததாவது:-

யாழ். மாவட்டத்திற்கு இலவச பாடநூல்கள் விநியோகம் அதனுடன் சம்பந்தப்பட்டோர் எதிர்நோக்கும் பிரச்சினைகள் மற்றும் புத்தகங்களை மாணவர்கள் பயன்படுத்தும் விதங்கள் போன்றவை தொடர்பாக ஆராய்வதே எனது யாழ். விஜயத்தின் நோக்கம். இதற்காக சகல வலயங்களுக்கும் நான் செல்லவுள்ளேன்.

இந்த ஆண்டு சுமார் எட்டுக் கோடி ரூபாவுக்கு மேற்பட்ட தொகையைச் செலவுசெய்து நான்கு வர்ணங்களைக் கொண்ட இலவச பாடநூல்கள் அச்சிடப்பட்டுள்ளன. இந்நூல்கள் குறைந்தபட்சம் மூன்று வருடங்களுக்காவது பயன்படுத்தப்பட வேண்டுமென எதிர்பார்க்கப்படுகிறது. அதற்காக மாணவர்கள் மத்தியில் "மீளப் பாவிப்புக் கொள்கை" ஒன்றை அறிமுகம் செய்யவுள்ளோம். இது தொடர்பான பரீட்சார்த்தி நிகழ்ச்சித் திட்டம் ஒன்று முதற்கட்டமாக ஊவா மாகாணத்தில் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

நூல்களை அவதானமாகக் கையாள்வது தொடர்பாக மாணவர் மத்தியில் விழிப்புணர்வை ஏற்படுத்தும்முகமாக சுவரொட்டி மற்றும் துணைப்பாடவிதான செயற்பாடுகளூடான போட்டிகள் நடத்தப்பட்டு பரிசுகள் வழங்கும் திட்டமொன்றும் அறிமுகம் செய்யப்படவுள்ளது.

போட்டிகளில் பரிசு பெறுவதற்காக மாணவர்கள் சிலர் தமக்கு வழங்கப்பட்ட பாடநூல்களை உபயோகிக்காமலே வைத்திருக்கக்கூடும். இது நூல்கள் வழங்கப்பட்டதன் நோக்கத்தையே பயனற்றுப் போகச் செய்துவிட நேரிடலாம். இது குறித்தும் கவனம் செலுத்தப்படும்.

இந்த வருடம் யாழ். மாவட்டத்திற்குத் தேவையான ஆறு லட்சத்து 99ஆயிரத்து 250புத்தகங்களில், ஆறு லட்சத்து 84ஆயிரத்து 613 புத்தகங்கள் வழங்கப்பட்டுவிட்டன. இது ஏறத்தாழ மொத்த தேவையின் 98 சதவீதமாகும். விரைவில் மிகுதிப் புத்தகங்களும் வழங்கப்படவுள்ளன. அடுத்த வருடம் இதைவிட விரைவாகப் பாடநூல்களை வழங்க ஏற்பாடு செய்யப்படும். இம்முறையும் கடந்த டிசெம்பர் மாதத்திலேயே அவற்றை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது. எனினும் கப்பல் போக்குவரத்தில் ஏற்பட்ட தடங்கல்களால் முயற்சி கைகூடவில்லை. முன்னரும் பாடநூல் விநியோகத்தில் தாமதம் ஏற்பட்டுள்ளது. நூல்களைப் பகிர்ந்தளிப்பதில் கையாளப்பட்ட தவறான அணுகுமுறைகளே அதற்குக் காரணம்.

இம்முறை அச்சிடப்பட்டுள்ள நூல்களில் எழுத்துக்கள், கருத்துக்கள், இலக்கணங்கள் போன்றவற்றில் தவறுகள் ஏற்பட்டிருக்கலாம். படங்கள் சரியான இடத்தில் இடம்பெறாது விட்டிருக்கலாம். பாடநூல்களில் காணப்படும் சகல தவறுகளையும் சுட்டிக்காட்டுவதன்மூலம் அவற்றை அடுத்த பதிப்புக்களில் திருத்திக்கொள்ள முடியும். அதற்காகச் சகல ஆசிரியர்கள், மாணவர்கள் மற்றும் கல்விச் சமூகத்தினரும் முன்வந்து உதவி செய்ய வேண்டும். அத்துடன் ஆரோக்கியமான ஆலோசனைகளையும் வழங்க வேண்டும். ஏனெனில் நூல்களுடன் நெருங்கி உறவாடுபவர்கள் ஆசிரியர்களும் மாணவர்களுமே. புதிய அணுகுமுறையால், புதிய கல்விக் கோட்பாடுகளுக்கு அமைவாக எழுதப்பட்டுள்ள இந்நூல்கள் தொடர்பான விமர்சனங்கள் வரவேற்கப்படுகின்றன.

கல்வி வெளியீட்டுத் திணைக்களம், இசுருபாய, பத்திரமுல்ல என்ற முகவரிக்கு உங்கள் விமர்சனங்கள், ஆலோசனைகளை அனுப்பிவைக்கலாம். இது விடயத்தில் ஒரு குழுவை அமைத்துச் செயற்பட உள்ளதாக தமிழர் ஆசிரியர் சங்கத்தினர் என்னிடம் தெரிவித்துள்ளனர்.

பொதுவாக மாணவர்கள் இலவச பாடநூல்களைப் பயன்படுத்தும்விதம் அவ்வளவு திருப்திகரமாக இல்லை என்றே கவலை தெரிவிக்கப்படுகிறது.

உயர்தர வகுப்பு மற்றும் பல்கலைக்கழக மாணவர்களுக்குப் பயனடக்கூடிய ஏராளமான மேலதிக வாசிப்பு நூல்கள் எமது திணைக்களத்தால் வெளியிடப்பட்டுள்ளன. இவற்றில் தமிழ்மொழிமூல நூல்களே இன்னமும் விற்கப்படாமல் எஞ்சியுள்ளன.

ஏனைய மொழி நூல்கள் வேகமாக விற்பனையாகின்றன. "கல்லூரித் தாவரவியல்", "இலங்கையின் சட்ட மன்றங்கள்" போன்றவை உட்பட பல புத்தகங்கள் தமிழ் மொழியில் அச்சிடப்பட்டு கல்வி வெளியீட்டுத் திணைக்கள விற்பனைப்பிரிவில் உள்ளன.

இவற்றை அவற்றின் பெறுமதியில் ஒரு சதவீதத்தை மட்டும் விலையாகக் கொடுத்துப் பெற்றுக்கொள்ளும் அரிய வாய்ப்பை தமிழ் மாணவர்கள் பயன்படுத்திக்கொள்ளவேண்டும்.

இது தொடர்பாகக் கல்வி நிறுவனங்களின் நிர்வாகங்கள் விசேட கழிவுடன் நூல்களைப் பெற்று மாணவர்களுக்கு விநியோகிக்க நடவடிக்கை மேற்கொள்ளவேண்டும்.

- இவ்வாறு ஹுச்சி முஹமட் தெரிவித்தார். (ஒ-9-180)

## மீசாலையில் இலவச மருத்துவ சேவை

தென்மராட்சி,பெப்.12

மீசாலை, புத்தூர் சந்தி, அல்லாரை, சங்கத்தானை ஆகிய பகுதிகளில் மீளக்குடியமர்ந்துள்ள மக்களின் நலன்கருதி சாவகச்சேரி லயன்ஸ் கழகத்தினர் ஒவ்வொரு வியாழக்கிழமையும் மீசாலை வீரசிங்கம் மகா வித்தியாலயத்தில் இலவச மருத்துவ சேவையினை நடத்திவருவதாகக் கழகச் செயலாளர் லயன் சி.சிவபால சுப்பிரமணியம் அறிவித்துள்ளார்.

இந்தச் சேவையில் கழகத்தின் மருத்துவர்களும் யாழ்.பல்கலைக் கழக மருத்துவ பீட மாணவர்களும் சிகிச்சையினை மேற்கொள்வதாகவும் அவர் தெரிவித்தார். (ஒ-117)

## நான்காம் ஆண்டு நினைவலைகள்

மலர்வு 01 - 06 - 1938



உதிர்வு 29 - 01 - 1998

### அமரர் இளையதம்பி புஸ்பராசா

(இளைப்பாறிய இயந்திர இயக்குநர். யாழ். போதனா வைத்தியசாலை)

அப்பா நீங்கள் நமைப் பிரிந்து
ஆண்டு நான்குகள் சென்றன.
ஆயினும் உங்கள் நினைவுகள்
என்றென்றும் நீங்காது.

- குடும்பத்தினர். (ஏழாலை)

*அத்தியடி, யாழ்ப்பாணம்.* (562)

## கண்ணீர் அஞ்சலி



வேலணை மேற்கின்
சமூக நேயம்மிக்க குடும்பத்தின் தவப்புதல்வரும்
சிறந்த சமூக சேவையாளரும்
கிராமத்தின் விசுவாசியுமான

### அமரர் வாதவூரார் தவச்செல்வம் (ஜே.பி.)

அவர்களின் மறைவையிட்டு மீளாத்துயரில் ஆழ்ந்திருக்கும் அவரது குடும்பத்தினருக்கும், உறவினர்களுக்கும் எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிக்கின்றோம்.

க.கங்கைவேணியன்
(திலக்ஷனா தொலைத்தொடர்பு நிலையம்)
ஆ.சபாநாதன் (கிராம அலுவலர் J/17)

*6ஆம் வட்டாரம், சிற்பனை வீதி, வேலணை.* (565)

## கண்ணீர் அஞ்சலி

வலிகாமம் கல்வி வலயத்தின்
காவலாளியாகக் கடமையாற்றிய

### அமரர் நல்லையா வசந்தகுமார்

அவர்கள் 10.02.2002இல் இறைபதம் எய்தியது குறித்து அன்னாரது குடும் பத்தாருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தையும் துக்கத்தையும் தெரிவிப்ப தோடு அன்னாரின் ஆத்மசாந்திக்கும் பிரார்த்தனை செய்கின்றோம்.

வலிகாமம் வலயக் கல்விப் பணிப்பாளரும்,
நலன்புரிக்கழக உறுப்பினர்களும்.

(C/20700)

## மரண அறிவித்தல்

### கந்தையா சத்தியசீலன்

(மானிப்பாய் ப.நோ.கூ.ச. எரிபொருள் முகாமையாளர்)

நவாலியைப் பிறப்பிடமாகவும் உடுவிலை வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா சத்தியசீலன் அவர்கள் 04.02.2002 திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் செல்வராணியின் அன்புக் கணவரும் ஆன் (ஜெர்னி), டல்றின், தமறா, கிறியன்சி, செரோன், டிரோசன், அக்ஷா, டிவோன்கா ஆகியோரின் பாசமிகு தந்தையும் கந்தையா - நாகம்மா ஆகியோரின் சிரேஷ்ட புத்திரனும் ஆசீர்வாதம் - ஜசிந்தா (கொழும்பு) ஆகியோரின் மருமகனும் ராணிகமலா (France), விஜயகுமாரி (நவாலி), வசந்தகுமாரி (France), தேவிமனோகரி (ஜேர்மனி), சாந்தகுமாரி (நவாலி), ஜெயகுமாரி (ஜேர்மனி), ஞானசீலன் (France), ரவிசங்கர் (Swiss), கோமதி (France) ஆகியோரின் சகோதரனும் வடிவேலு, துரைசிங்கம், ஞானசேகரம், தெய்வேந்திரம் (Germany), ஜெயக்கொடி, ஞானசேகரம், ரஞ்சன் (Swiss), ரஞ்சன் ஆகியோரின் மைத்துனரும் எஸ்தர் யசோதா, யோகராணி, மதியழகன் (Swiss), ரூபி (Swiss), கிரிதரன், கௌரி, வாசுகி (Canada), துஷ்யந்தன், சதீஸ், ஜானகி (Canada) ஆகியோரின் உடன்பிறவாச் சகோதரனும் சுரேஸ்குமார், பேபியகிலா, செல்வகுமார், அனுரா, கேமமாலினி (France), பிரதீபன் (Swiss), பிரபாகரன் (France), பிரபாஸ்கரன், ஜெயமிலா (Germany), ரேணுகா, சுனிற்றா, கோபிகிருஸ்ணன் (நவாலி), பெனோடிரோசன் (Germany), கஜன், கபிலினி (Germany) ஆகியோரின் மாமனாரும் நடராசா - செல்லம்மா (Canada) ஆகியோரின் பெறாமகனும் நடராசா - லீலா (India) ஆகியோரின் மருமகனுமாவார்.

அன்னாரின் பூதவுடல் நாளை (13.02.2002) புதன்கிழமை பிற்பகல் 1.00 மணிக்கு அவரது இல்லத்திலிருந்து எடுத்துச்செல்லப்பட்டு தாவடியில் உள்ள சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
சகோதரன் க.ஞானசீலன்
(France - வவா)

(568)


ராஜா யாழ்ப்பாணம்
அஜித், ஜோதிகா, விவேக் நடிப்பில்
பூவெல்லாம் உன் வாசம்
தினசரி: 10.30, 2.30 (புதிய நேரம்)
சனி, ஞாயிறு: 10.30, 2, 5(பு.நே.)

நிறைஞ்சனாஸ் சங்கானை
முரளி, தேவயானி, ரம்பா நடிக்க
ஆனந்தம்
காட்சிகள்: 11.00, 2.30, 5.30

லஷ்சுமி இணுவில்
அலை தோண்டா (ரீமேக்)
காட்சிகள்: 10.30, 2.30, 4.45, 8.10

நாகம்ஸ் சுன்னாகம்
இன்று மட்டும்
விஜய், பூமிகா, நடிக்க
பத்ரி
காட்சிகள்: 11.00, 3.00 (புதியநேரம்)
நாளைமுதல் தவசி


## மரண அறிவித்தல்கள்

### அன்ரனி செபஸ்ரியாம்பிள்ளை

(முன்னாள் சலூன் உரிமையாளர், சுன்னாகம்)

குருநகரைச் சேர்ந்த அன்ரனி செபஸ்ரியாம்பிள்ளை நேற்று (11.02.2002) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற மரியம்மாவின் அன்புக் கணவரும் அல்போன்ஸ், டேவிற், பேனாட், சலேற்அம்மா, ஜேம்ஸ், யேசுதாசன், றெஜீனா, மேரி மாகிரேற் ஆகியோரின் பாசமிகு தந்தையும் சித்திரா, சரோஷா (குண்டுமணி), விக்ரோறியா, எட்வேட், பராசக்தி, காலஞ்சென்ற இராசரத்தினம், கணவதிப்பிள்ளையார் (சிவா) ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (12.02.2002) செவ்வாய்க்கிழமை பிற்பகல் 4.00மணியளவில் புனித ஜோஞ்சேஞ்சிமாதா சேமக்காலையில் நல்லடக்கஞ் செய்யப்படும்.

*25/7, மத்திய கிழக்கு வீதி, றெக்கிளமேசன், குருநகர், யாழ்ப்பாணம்.* (564)

தகவல்
செ.ஜேம்ஸ்
(மகன்)

### க.சி.நமசிவாயம்

(ஓய்வுபெற்ற நில அளவையாளர், செயலாளர் - ஓய்வூதிய சங்கம், செயலாளர் - கோம்பையன்மணல் பரிபாலனசபை)

சாவகச்சேரி, சங்கத்தானையைப் பிறப்பிடமாகவும் வண்ணார்பண்ணை ஐயனார் கோயிலடியை வசிப்பிடமாகவும் தற்போது பிறவுண் வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட க.சி.நமசிவாயம் அவர்கள் 08.02.2002 வெள்ளிக்கிழமை இறைபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னத்துரை தம்பதியினரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான கிளாக்கர் சின்னையா (சாவகச்சேரி, சங்கத்தானை) தம்பதியினரின் அன்பு மருமகனும் காலஞ்சென்ற லோகேஸ்வரியின் அன்புக் கணவரும் பிரமிளா (சித்திர ஆசிரியை, கோண்டாவில் இந்து மகா வித்தியாலயம், கோண்டாவில் இராமகிருஷ்ண ம.வி.), திருமதி சிறிதரன் மஞ்சுளா (ஜேர்மனி), சிறிதரன் (ஹொலண்ட்), திருமதி ஜெகநாதன் பரிமளா (சங்கீத ஆசிரியை), விஜியதரன் ஆகியோரின் பாசமிகு தந்தையாரும் சிறிதரன் (ஜேர்மனி), யாமினி (ஹொலண்ட்), ஜெகநாதன் (ஆசிரியர், வட்டுக்கோட்டை இந்துக் கல்லூரி), பிரதீபா ஆகியோரின் அன்பு மாமனாரும் மகிந்தன், ஜெசிந்தினி, நசாயினி, டிலக்ஷன் ஆகியோரின் அன்புப் பேரனாரும் ந.ஜெகநாதன், ந.கோபாலநாதன், ந.தியாகநாதன், திருமதி நாகேஸ்வரன் கனகீஸ்வரி, திருமதி மகேஸ்வரன் நாகேஸ்வரி ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (13.02.2002) புதன்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் கோம்பையன்மணல் மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
ந.விஜியதரன் (மகன்),
ந.தியாகநாதன் (மைத்துனர்)
(இலங்கை வங்கி, 2ஆம் கிளை, யாழ்ப்பாணம்)

முகவரி:
*193/4, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.* (C/20701)

# வேட்பாளர் பட்டியலில் புளொட்டின் சாதனை

கொழும்பு,பெப்.12

மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ளூராட்சித் தேர்தலில் சமர்ப்பிக்கப்பட்ட வேட்பாளர் பட்டியல் ஒன்று சாதனை படைத்துள்ளது.

புளொட் அமைப்பின் சார்பில் அதன் தலைவரும் வவுனியா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான தர்மலிங்கம் சித்தார்த்தன் மட்டக்களப்பு மாவட்டம் பட்டிப்பளை பிரதேச சபைக்கு சமர்ப்பித்த வேட்பாளர் பட்டியலே சாதனை புரிந்துள்ளதாகக் கூறப்படுகின்றது.

அந்த வேட்பாளர் பட்டியலில் இடம்பெற்றுள்ள 12பேரும் பெண்களாவார்கள். இவ்வாறு முற்றுமுழுதாகப் பெண்களை மட்டுமே கொண்ட வேட்பாளர் பட்டியல் ஒன்று சமர்ப்பிக்கப்படுவது இதுவே முதல் தடவை என்று கூறப்படுகிறது.

பல பெண்கள் போட்டியிட விரும்பியதாகவும் -

அதனால் அவர்கள் மட்டும் இடம் பெற்றுள்ள பட்டியல் சமர்ப்பிக்கப் பட்டதாகவும் -

புளொட் வட்டாரங்கள் தெரிவித்தன.

அவர்கள் தேர்தலில் தோற்றாலும் கூட முற்றிலும் பெண்களைக்கொண்ட பட்டியலைச் சமர்ப்பித்த சாதனை நிலைக்கும் என்றும் அந்த வட்டாரங்கள் கூறின.

புளொட்டைப் போன்று கொழும்பில் 59பெண்கள் அடங்கிய வேட்பாளர் பட்டியலை சுயேச்சைக்குழு ஒன்று சமர்ப்பித்துள்ளது. (ஒ)

# சமாதான முயற்சிக்கு எதிராக ஜே.வி.பி. பிரசாரக் கூட்டம்

கொழும்பு,பெப்.12

சமாதான முயற்சிக்கு எதிர்ப்புத் தெரிவித்து நாளைமறுதினம்முதல் ஜே.வி.பி. பொதுக்கூட்டங்களை நடத்தவிருக்கின்றது.

சமாதான முயற்சியின் ஊடாக நாட்டைத் துண்டாட எடுக்கப்படும் நடவடிக்கைக்கு எதிராக பிரசாரகூட்டங்களை நடத்துவதாக ஜே.வி.பியின் பிரசாரச் செயலர் விமல்வீரவன்ஸ தெரிவித்துள்ளார்.

அத்தோடு இவை மார்ச் மாதம் நடைபெறவிருக்கும் உள்ளூராட்சித் தேர்தலுக்கான பிரசார கூட்டங்களாகவும் அமையுமென்றும் அவர் தெரிவிததார்.

நாளைமறுதினம் பிற்பகல் 3 மணிக்கு காலியில் ஜே.வி.பியின் முதலாவது எதிர்ப்புப் பிரசாரக் கூட்டம் நடைபெறவுள்ளதாகக் கூறப்படுகிறது.

சமாதான முயற்சிகளுக்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் வகையிலும், விடுதலைப் புலிகள் மீதான தடை நீக்கப்படக் கூடாது என்பதை வலியுறுத்தியுமே ஜே.வி.பி. உள்ளூராட்சி சபை தேர்தலுக்கான பிரசார நடவடிக்கையில் ஈடுபடவுள்ளதாகக் கூறப்பட்டது. (ஒ-9)

## திட்டமிட்டபடி வெள்ளி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பாட்டிலுள்ள பகுதிகளுக்குள் கண்ணிகளை அகற்றும் பணியை கடந்த ஒருவார காலமாக மேற்கொண்டு வருகின்றனர்.

தத்தமது கட்டுப்பாட்டுப் பகுதிகளின் எல்லைகளில் பயணிகளையும், வாகனங்களையும் சோதனை செய்வது உட்பட நடைமுறை ஏற்பாடுகளைச் செய்வதிலும் இரு தரப்புகளும் ஈடுபட்டிருந்தன.

இந்தப் பாதைகள் திட்டமிட்டபடி 15ஆம் திகதி திறந்துவிடப்படும் என்று விடுதலைப் புலிகளின் அரசியல் துறை நேற்றுமுன்தினம் அறிவித்தது.

குறித்த தினத்தில் பாதைகளைத் திறக்க தமது தரப்பு ஏற்பாடுகள் பூர்த்தியடைந்துவிட்டதை புலிகள் இதன்மூலம் தெரியப்படுத்தியிருந்தனர்.

ஆனால் சில நடைமுறைச் சிக்கல்கள், நிர்வாக ரீதியான பிரச்சினைகள் காரணமாகப் பாதைகளைத் திறப்பது தாமதமடையலாம் என்று அமைச்சர் ஜயலத் ஜெயவர்த்தனா தெரிவித்தார்.

"இரண்டு வீதிகளும் திட்டமிட்டபடி குறித்த தினத்தன்று திறக்கப்படமாட்டா என்று உறுதியாகச் சொல்ல முடியாது எனினும் சில சிக்கல்கள், நடைமுறைப் பிரச்சினைகள் இருப்பதால் பாதைகளைத் திறப்பது மேலும் சில தினங்கள் தாமதமாகலாம் ஆனால் எப்படியும் பாதைகள் திறக்கப்படுவது உறுதி என்று - அவர் நேற்றிரவு உதயனுக்குத் தெரிவித்தார்.

இதற்கிடையில் -

ஏற்கனவே அறிவிக்கப்பட்டபடி கண்டி வீதி எதிர்வரும் வெள்ளிக்கிழமை திறக்கப்படமாட்டாது என்று வவுனியா படைத் தலைமையகமும் தெரிவித்திருப்பதாக 'தமிழ்நெற்' இணைத்தளம் தகவல் வெளியிட்டிருக்கிறது.

சில தடங்கல்கள் காரணமாக கண்டிவீதி திறக்கப்படும் தினத்தை முன்கூட்டியே திட்டவட்டமாக கூற முடியாது இருப்பதாக வவுனியா படைத் தலைமையக அதிகாரி ஒருவர் தெரிவித்திருக்கிறார்.

பாதைகளைத் திறப்பதற்கான ஆயத்த நிலையில் வவுனியா அரச செயலகம் இருப்பதாக அரச அதிபர் தெரிவித்துள்ளார். (ஐ-3-9)

இதோ விற்பனையாகின்றன!

விசேட கழிவுடன்

❄ 2002 - லீலா பஞ்சாங்க தினக் கலண்டர்கள்

❄ 2002 - லீலா மாதக் கலண்டர்கள்

❄ 2002 - லீலா டயறிகள்

என்பன விற்பனையாகின்றன.

உதயன் பணிமனை

361, கஸ்தூரியார் வீதி,

யாழ்ப்பாணம்.

(C/20698)

புதிய வெளியீடுகளும், மலிவு விற்பனையும்

ITN இன் ஒரு வருடப் பூர்த்தியை முன்னிட்டு

தமிழ், ஆங்கில திரைப்பட CDகளும்,

புதிய பழைய பாடல் CDகளும், கர்நாடக CDகளும்

மாபெரும் மலிவு விற்பனையில்!

இங்கு வாங்கும் பொருள்களுக்கும், ஒளிப்பதிவுக்கும் 5 % கழிவு உண்டு.

இச்சலுகை 10.02.2002 - 18.02.2002 வரை மட்டுமே

ITN

வீடியோ ஓடியோ

மியூசிக் சென்ரர்

365, பலாலி வீதி,

NOTE:-

இச்சலுகை பரமேஸ்வராச் சந்தி கிளையில் மாத்திரம். பரமேஸ்வராச் சந்தி.

(563)

## 3,000 ஆசிரியர்களை நியமிக்க அங்கீகாரம்

திருகோணமலை,பெப்.12

வடக்கு - கிழக்கில் உள்ள பாடசாலைகளுக்கு 3ஆயிரம் ஆசிரியர்களை நியமிக்க உலக வங்கி அங்கீகாரம் வழங்கியுள்ளது என்று மாகாணக் கல்வி அமைச்சுச் செயலாளர் கே.சண்முகலிங்கம் தெரிவித்தார்.

பட்டதாரிகளில் இருந்து ஆயிரம் பேரும் -

ஜி.சீ.உயர்தரப் பரீட்சையில் தோற்றியவர்களில் இருந்து ஆயிரம் பேரும்-

தொண்டர் ஆசிரியராகப் பணிபுரிவோரில் இருந்து ஆயிரம் பேரும் -

ஆசிரியர்களாக நியமிக்கப்படவுள்ளனர் என்றும் அவர் தெரிவித்தார்.

எப்போது நியமனம் வழங்கப்படும் என்ற விவரம் அறிவிக்கப்படவில்லை. (ஐ-3)

## ஆனந்தசங்கரி ஆஸ்திரேலியா பயணம்

கொழும்பு,பெப்.12

ஐ.தே.க. பிரதித் தலைவர் கரு ஜெயசூரிய தலைமையில் நாடாளுமன்றக் குழுவொன்று ஆஸ்திரேலியாவுக்குச் சென்றுள்ளது.

இந்தக் குழுவின் சார்பில் அமைச்சர் கருணசேன கொடிதுவக்கு, தமிழர் விடுதலைக் கூட்டணியின் சிரேஷ்ட உபதலைவர் ஆனந்தசங்கரி, முஸ்லிம் காங்கிரஸ் நாடாளுமன்ற உறுப்பினர் அமீர் ஸ்னோர் ஆகியோர் அடங்குகின்றனர்.

கருத்தரங்கு ஒன்றில் பங்குபற்றவே இவர்கள் அங்கு சென்றுள்ளதாக அரசவட்டாரங்கள் தெரிவித்தன.(ஒ-9)

## 32பொலீஸ்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அப்போதே பதவி உயர்வுகளை ரத்துச்செய்யும் தீர்ப்பை நீதியரசர்கள் வழங்கினர். சட்டமா அதிபர் கமலசபேசன், பொலீஸ் மா அதிபர் பி.எஸ்.வி. கொடித்துவக்கு, பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஆர்.கே.சந்திரானந்த டி சில்வா, பொதுச் சேவைகள் ஆணைக்குழுவின் தலைவர் விக்னராஜா ஆகியோர் உட்பட 52பேர் எதிர் மனுதாரர்களாக மனுவில் குறிப்பிடப்பட்டு 60ஆயிரம் ரூபாவை 50ஆவது, 51ஆவது, 52ஆவது எதிர் மனு தாதரர்கள் ரூபா 20ஆயிரம் வீதம் செலுத்த வேண்டும். மிகுதியாக உள்ள 3 லட்சம் ரூபாவை அரசு செலுத்தவேண்டும்.

2000ஆம் ஆண்டு மார்ச், மே மாதங்களில் நேர்முகப்பரீட்சைக்கு அழைக்கப்பட்டு நேர்முகப்பரீட்சையில் பங்குகொண்ட அனைவருக்கும் மீண்டும் புதிய நேர்முகப்பரீட்சைகள் நடத்தப்படவேண்டும் எனவும் நீதிமன்றம் தீர்ப்பளித்தது.

முதலாம், 4ஆம், 50ஆம், 51ஆம் 52ஆம் எதிர் மனுதாரர்களின் நடவடிக்கைகள் அரசமைப்பின் 70ஆவது சரத்தின் பிரகாரம் ஊழல்கள் சம்பந்தப்பட்டதா என்பதைத் தீர்மானிப்பதற்கு சட்டமா அதிபருக்கு நீதிமன்றம் அறிவுறுத்தல் வழங்கியுள்ளது.

ஊழல்கள் சம்பந்தப்பட்டிருப்பதாகக் காணப்படும் பட்சத்தில் அவர்களுக்கு எதிராக நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு அறிக்கை ஒன்றை ஏப்ரல் 30ஆம் திகதிக்கு முன்பு நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கும்படியும் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. (ஐ)

எமது புதிய வீடியோ CD வெளியீடு

கபாலி பொன்னம்பலம் நடிக்க

அம்மையப்பா

பிரதிகள் உடன் பெறலாம்.

வீடியோ விமல்

(C/20702) யாழ்ப்பாணம்.

எமது புதிய

வீடியோ CD வெளியீடு

★ ஷக்கலக்கபேபி

அல்டி

எலக்ரோனிக்ஸ்

(C/20703) யாழ்ப்பாணம்.

A/L 2003

தமிழ்

ஆரம்பம் - 13.02.2002

புதன் பி.ப. 2.30 (புதிய நேரம்)

By S.ஆதவன்

Director,

WIN ACADEMY,

(கிறீன் பார்க் U.N.D.P. அருகில்)

Temple Road,

Jaffna. (616)

# லொகான் ரத்வத்தைக்கு கண்டி நீதிமன்றம் பிடியாணை

கொழும்பு,பெப்.12

முன்னாள் பாதுகாப்புப் பிரதி அமைச்சர் அனுருத்த ரத்வத்தயின் மகன் லொகான் ரதவத்தையை கைதுசெய்வதற்கான பிடியாணை பிறப்பிக்கப்பட்டது.

இதற்கான உத்தரவை கண்டி பிரதம நீதிவான் சி.ப.ஏ.ராஜபக்ஷ நேற்றுப் பிறப்பித்தார்.

பிரதிப் பொலீஸ் அதிபர் சிறிசேனவினால் தாக்கல் செய்யப்பட்ட வழக்கில் லொகான் ரத்வத்தை உட்பட 8 பேர் எதிரிகளாகக் குறிப்பிடப்பட்டிருந்தார்கள்.

அவர்கள் மீது - பொலீஸாருக்கு கொலை அச்சுறுத்தல் விடுத்ததாக குற்றஞ்சாட்டப்பட்டிருந்தது.

இந்த வழக்கு நேற்று விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

அந்தச் சமயத்தில் லொஹான் ரத்வத்த மன்றிற்கு சமுகமளிக்கவில்லை. மாறாக அவரது சார்பில் மருத்துவ அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டது. அதனை நிராகரித்த நீதிவான் லொகான் ரத்வத்தையைக் கைது செய்யுமாறு உத்தரவிட்டார்.

இந்த வழக்கில் லொகான் ஏற்கனவே கைதுசெய்யப்பட்டு அவரது தாயார் பிணை நின்று விடுவிக்கப்பட்டார். (ஒ-9)

## உள்ளூராட்சித் தேர்தலிலும் வன்முறைகள்

கொழும்பு,பெப்.12

உள்ளூராட்சிச் சபைகளுக்கான வேட்புமனுத் தாக்கல் ஆரம்பமானதைத் தொடர்ந்து இதுவரை 22 தேர்தல் வன்முறைச் சம்பவங்கள் தொடர்பான முறைப்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாகக் கூறப்படுகின்றது.

இவற்றில் 14 வன்செயல்கள் தொடர்பாக ஐ.தே.கவும், 7 சம்பவங்கள் குறித்து பொ.ஐ.முவும் முறைப்பாடு செய்துள்ளன. (ஒ-9)

## அமைச்சர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

புரி நிலையங்களையும் பார்வையிடுவார்.

அதைத் தொடர்ந்து யாழ். செயலகத்தில் பிற்பகல் 2.30 மணிக்கு இடம்பெறும் கலந்துரையாடலில் பங்குபற்றுவார். அரச அதிபர் மற்றும் திணைக்களத் தலைவர்கள் இதில் கலந்து கொள்வர்.

யாழ். போதனா வைத்தியசாலையில் நாளை காலை 9மணிக்கு பிளாஸ்ரிக் சத்திர சிகிச்சை நிகழ்வை அமைசசர் ஆரம்பித்து வைப்பார்.

அமைச்சருடன் வடக்கு புனர்வாழ்வு, புனரமைப்பு அதிகார சபைத் தலைவர் என்வாமதேவா, நிதிப் பணிப்பாளர் ஈ.அன்னலிங்கம் ஆகியோரும் பத்திரிகையாளர்களும் வருகின்றனர். (ஐ-3-10)

## பிரிட்டிஷ்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ளவர்களின் விவரம் வருமாறு:-

சாள்ஸ் விவா (பிளாஸ்ரிக் சத்திரசிகிச்சை நிபுணர்), ஹாட்மன் (பிளாஸ்ரிக் சத்திர சிகிச்சை நிபுணர்), கீதா ராஜேந்திரம் (காது, தொண்டை நிபுணர்), ரி.சிவஞானம் (மயக்க மருந்து நிபுணர்), ஈ.வேலாயுதபிள்ளை (மயக்க மருந்து நிபுணர்), டேவிட் (கண் சிகிச்சை நிபுணர்), ராசோட் (கண் சிகிச்சை நிபுணர்), புளோறன்ஸ் (தாதி), டேஸ்ஸிகூச் (தாதி), அண்டி (தாதி), பிராங் ஸ்மித் (இணைப்பாளர்).

இவர்களுடன் ஜேர்மன் உதவி மன்றத்தைச் சேர்ந்த குழுவும் மல்கம் பெரேரா தலைமையில் இங்கு வந்துள்ளது. (ஐ-3-15-180)

## பாதுகாப்பு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கையரல்லாதவர்களோ அல்லது வெளிநாட்டு ராஜதந்திரிகளோ விடுவிக்கப்படாத பகுதிகளுக்குச் செல்லும்போது அங்கு அவர்களது பாதுகாப்புக்கு அவர்களே பொறுப்பாளிகளாக இருப்பர் என்றும் பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது. (ஐ-3)

# மரண அறிவித்தல்கள்

## ஆறுமுகம் சிவசம்பு

மண்டைதீவு, 6ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் 202/2, நாவலர் வீதி, யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட ஆறுமுகம் சிவசம்பு நேற்று (11.02.2002) திங்கட்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் கனகம்மாவின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற ஆறுமுகம் - ஆச்சிக்குட்டி தம்பதிகளின் அன்பு மகனும் பொன்னம்பலம் - வள்ளியம்மை தம்பதிகளின் மருமகனும் சந்திரோதயம், சந்திரகாந்தி, சந்திரவதனா (ஓய்வுபெற்ற ஆசிரியை), தவநாயகி (ஆசிரியை, யா/ஆனைப்பந்தி மெதடிஸ்த மிஷன் வித்தியாலயம்),உதயகுமார் (லண்டன்), சந்திரவடிவு (சுவிஸ்), செல்வக்குமார் (சுவிஸ்), நந்தகுமார் (இத்தாலி), சந்திரமதி (லண்டன்), ஜெயக்குமார் (லண்டன்) ஆகியோரின் அன்புத் தகப்பனாரும் மகேஸ்வரன், சிவமணி (சுனித்தா ரேடர்ஸ், கொழும்பு), கனகரட்ணம் (ஆசிரியர், யா/மண்டைதீவு ம.வி.), யசிந்தா (லண்டன்), ரவீந்திரன் (சுவிஸ்), அனுஷா (சுவிஸ்), அனுஷா (இத்தாலி), இந்திரன் (லண்டன்) ஆகியோரின் அன்பு மாமனாரும் காலஞ்சென்றவர்களான பொன்னம்பலம், செல்லையா (பொலீஸ் உத்தியோத்தர்), ஐயாத்துரை மற்றும் நடராஜா, புவனேஸ்வரி ஆகியோரின் அன்புச் சகோதரரும் ஷோபிகா, சாமந்தி, விவேக்கா, சரண்ஜா, ஷம்யுக்தா, துவாரகா, வாரணன், நிருபனா, நிவேத், விதூஷிகா, அருணன், அஜிதன், சுபிசனா, விதூஷன், சுவாதி, நிலானிகா, ஆதனா ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (12.02.2002) செவ்வாய்க்கிழமை முற்பகல் 10 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக கோம்பையன்மணல் மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்:

*202/2, நாவலர் வீதி,*
*யாழ்ப்பாணம்.* (647)

மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள்.

## தம்பிமுத்து வேலுப்பிள்ளை (T.V.)

(காரைநகர்)

காரைநகர் தங்கோடை கள்ளித்தெருவைப் பிறப்பிடமாகக்கொண்டவரும், மானிப்பாய் ஆஸ்பத்திரி பின் வீதியை வசிப்பிடமாகக்கொண்டவருமாகிய தம்பிமுத்து வேலுப்பிள்ளை நேற்று (11.02.2002) திங்கட்கிழமை காலை காலமானார்.

அன்னார் சிவகாமியின் அன்புக் கணவரும் உமாபதி, செல்வராசா, சகுந்தலாதேவி, சாரதாதேவி, தியாகராசா, வசந்தகுமாரி ஆகியோரின் அன்புத் தந்தையும் சரஸ்வதி, ஆனந்தவசந்தகுமாரி, விக்னேஸ்வரன், ஞானசுந்தரம், புஷ்பராணி, நவரட்ணம் ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (12.02.2002) செவ்வாய்க்கிழமை காலை 10 மணிக்கு நடைபெற்று, மானிப்பாய் பிப்பிலி இந்து மயானத்தில் தகனக்கிரியைகள் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அவைரும் ஏற்றுக்கொள்ளவும்.

விலாசம்:
*மானிப்பாய் ஆஸ்பத்திரி பின் வீதி,*
*மானிப்பாய்.* (650)

தகவல்:
மனைவி, மக்கள்,
மருமக்கள்.

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 12.02.2002இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.